விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 20 செவ்வாய்க்கிழமை (03.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

ஈ.பி.டி.பி, சுதந்திரக்கட்சி, ஐ.தே.க ஆதரவுடன்

## வலி.வடக்கு பிரதேச சபையிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச சபையிலும் ஈ.பி.டி.பி கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது.

தவிசாளராக தமிழரசுக்கட்சியினை சேர்ந்த சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவுசெய்யப்பட்டார். உபதவிசாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த பொன்னம்பலம் ராஜேந்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி மன்றாங்களினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவினைப் பெற்று 23☛

வடமராட்சி அம்பன் பகுதியில்

## மகள் சடலமாக மீட்பு; வெட்டுக் காயங்களுடன் தாயார் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)



வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து மகள் சடலமாகவும், தாயார் படு காயங்களுடனும் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். 23☛

## ரயில் விபத்து குடும்பஸ்தர் பலி

யாழ். நெள்ளுக்குளம் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழில் நெள்ளுக்குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 23☛


## யாழ். பல்கலையில் கொடும்பாவி எரித்து நேற்று போராட்டம்



24☛

# தமிழ் அரசியல் கைதிகள் பலர் விரைவில் விடுதலை!

## பிரதமர் ரணில் உறுதியாக தெரிவிப்பு



**(கொழும்பு) தமிழ் அரசியல் கைதிகள் பலர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படத் தெரிவித்துள்ளார். மேலும் ஏனைய கைதிகள் ஒரு குறுகிய புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

அரசியல் கைதிகள் பலரும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என பிரதமருடனான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சந்திப்பில் அரசியல் கைதிகள் பலர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என உறுதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிரதமரின் அழைப்பின் பேரில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் அலரி 23☛

## போராட்டம் நடத்திய குடும்பம் மீது அச்சுறுத்தல்

மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு பதிவு

(பனிக்கன்குளம்)

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற இலங்கை சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த 23☛

## பேரவையின் அலுவலகம் மீது இனந்தெரியாத நபர்களால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பேரவையின் அலுவலகம் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதுடன் அங்கிருந்த தளபாடங்கள் பணம் என்பன திருடிச் செல்லப்பட்டுள்ளது. 23☛

பல்கலை கல்விசாரா ஊழியர்களின்

## பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் நாடு முழுவதும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி அமைச்சுடனர் நேற்று இடம்பெற்ற பேச்சு 23☛

வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

## 120 குளங்களை புனரமைப்பு செய்ய 500 மில்லியன் ஒதுக்கீடு: சந்திரிகா

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அழிவடைந்த நிலையில் காணப்படும் 120 குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக நல்லிணக்க செயலணியால் 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க செயலணியால் சங்கானை பண்டிக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டு 23☛

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா

## பிரேரணை; நாளைய தினம் ஐ.தே.கவில் அதிரடி மாற்றம்

(கொழும்பு)

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நாளைய தினம் பாராளுமன்றத்தில் கூட்டு எதிரணியினால் கொண்டு வரப்படவுள்ளது.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியினுள் அதிரடியான பல மாற்றங்கள் இடம்பெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதன் செயற்குழு எதிர்வரும் 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் கூடவுள்ளது.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் இத 23☛

## கூட்டமைப்புடன் இணைந்து பிரேரணையை தோற்கடித்தால்

சிங்கள மக்கள் தவறாகப் புரிந்து கொள்வர் ஜனாதிபதி மைத்திரி அச்சம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து, நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடித்தால் அதனை சிங்கள மக்கள் தவறாக புரிந்து கொள்வார்கள். அத்தோடு கூட்டு அரசின் பெயரையும் கெடுக்கக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அச்சம் வெளியிட்டுள்ளார்.

கூட்டு எதிரணியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் ஆராய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய 23☛

## நாவற்குழியில் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் மனு

இராணுவ அதிகாரி சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாக நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களில் எதிர்மனுதாரர்களான இராணுவ அதிகாரிகள் சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாவதற்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

யாழ். நாவற்குழி பகுதியில் கடந்த 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது நாவற்குழி படைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவெலான தலைமையிலான படையினர் 24 இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றனர். 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 முதல் O/L வரை கணிதமும் தரம் 10 மற்றும் O/L மாணவர்களுக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் தங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:- 0776452622**

(3486)


## தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்தை உறுதிப்படுத்துவற்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபைக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

கலந்து கொள்ளும் தொண்டராசிரியர்கள் தங்கள் முதல் நியமனத்தை உறுதிப்படுத்தும் பாடசாலை அதிபரின் பணி உறுதிப்படுத்தல் கடிதத்துடன் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம)

## இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா இலங்கை விஜயம்

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் விரைவில் இலங்கைக் கான விஜயத்தை மேற்கொள்ள விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான பொருளாதார உடன்பாடுகள் தொடர்பிலான முடிவுகளை எடுப்பதற்காக, அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாக கூறப்படுகிறது. எனினும் இந்த விஜயத்துக்கான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. (ம)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி
வளர்மதி பாலச்சந்திரன்
(ஆசிரியர்-SLTS 2.1)

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி வளர்மதி பாலச்சந்திரன் அவர்கள் கல்விமாணிப்பட்டத்தை (B.Ed) 28.03.2018 அன்று BMICH இல் நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் பெற்றுக் கொண்டதையிட்டு மகிழ்வடைவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்
யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை

(3496)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## சேவைநலன் பாராட்டு



அரச சேவையில் 33 ஆண்டுகள் அரும்பணியாற்றி 02.04.2018-ந் திகதி ஓய்வுபெற்றுச் செல்லும்

திருமதி சிவரூபி தவயோகராஜா

அவர்களின் சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம். மேலும் அவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

(F-2096)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2018.03.28 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி மாணிப்பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை

திருமதி சுசிலாதேவி குமாரசாமி

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர்வுகள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.


அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/கைவேலி கணேச வித்தியாலயம்

(F-2094)


## மரண அறிவித்தல்

### நாகமுத்து வேலுப்பிள்ளை

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 - 08 - 1927 | 02 - 04 - 2018 |



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் கிளை முகாமையாளருமான நாகமுத்து வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று திங்கட்கிழமை (02.04.2018) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து பொன்னம்மா தம்பதியினரின் மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுசிலாதேவி, சரோஜினிதேவி (கனடா), அமரர் ரஞ்சினிதேவி, யோகவதனி (சுவிஸ்), ஞானவதனி (UK), நாகேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரன் (ஆசிரியர்-யாழ் மத்திய கல்லூரி), திநேஸ் (அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகலிங்கம் (அளவெட்டி), ரவீந்திரன் (கனடா), பகிரதன் (சுவிஸ்), சுபாஜினி (கனடா), லக்சனா, லதாயினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (03.04.2018) முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவிலங்கை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்

(3483)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
தி.ரஞ்சித் (B.Ed)



திரு.
வை.ஜெயபாலன்
(B.Ed)



திருமதி
ஜெ.சத்தியசீலன்
(B.Ed)

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.வை.ஜெயபாலன், திருமதி தி.ரஞ்சித், திருமதி ஜெ.சத்தியசீலன் ஆகியோர் 28.03.2018 புதன்கிழமை B.M.I.C.H-ல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி இளமாணி பட்டத்தை (B.Ed) பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/விசுவமடு மகா வித்தியாலயம்

(3482)

# பிரதமர் ரணிலுடன் இணைந்து ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணமுடியாது

## தமிழ்க்கூட்டமைப்புக்கு தயாசிறி கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பிரதமரை காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் அது கூட்டமைப்புக்கே பாதகமாக அமையும். பிரதமர் ரணிலுடன் இணைந்து ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணமுடியாது என்பதனை கூட்டமைப்பு புரிந்து கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பிரதமரை காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் நாங்கள் எதிர்க்கட்சியாகி விடுவோம். எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவியையும் பெற்று நாம் எதிர்க்கட்சி பக்கம் சென்றுவிடுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே பிரதமரை பாதுகாக்க தமிழ்க் கூட்டமைப்பு முன்வராமல் எதிர்க்கட்சியாக நடந்து கொள்ள வேண்டும். கரு ஜெயசூரிய அல்லது ரஞ்சித் மத்தும பண்டார போன்ற ஒருவரை பிரதமராக நியமித்து தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து. விரைவில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணமுடியும். எனவே கூட்டமைப்பு இதனை புரிந்து கொண்டு நாளை 4 ஆம் திகதி முடிவெடுக்கும் என்று நம்புகின்றோம் எனவும் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நாளை 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான முடிவை எடுக்கப் போகின்றது என்பது குறித்து அனைவரும் எதிர்பார்த்துள்ள நிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் தனது வகி



பாகத்தையும் அரசியல் கதாபாத்திரத்தையும் உரிய முறையில் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது.

குறிப்பாக மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் தமிழ்க் கூட்டமைப்பு தனது அரசியல் வகிபாகத்தை உரிய முறையில் முன்னெடுக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் கூட கவலையடைகின்றோம்.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

இந்த வாக்கெடுப்பின் போது பிரதமருக்கு எதிராக வாக்களிக்கவே சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. எனினும் நாம்பிரதமரை எதிர்க்கும்போது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பிரதமரை காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் அது கூட்டமைப்புக்கே பாதகமாக அமையும் என்பதனை அக்கட்சி மனதில் கொள்ளவேண்டும்.

அதாவது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பிரதமரை காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தால் நாங்கள் எதிர்க்கட்சியாகி விடுவோம். எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவியையும் பெற்று நாம் எதிர்க்கட்சி பக்கம் சென்று விடுவோம்.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இணைவதுடன் அவர்கள் அரசாங்கமே உருவாகும். ஆனால் இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்க்கூட்டமைப்பும் இணைந்து அமைக்கும் அரசாங்கத்தினால் ஒருபோதும் தேசிய பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதனை கூட்டமைப்பு மறந்துவிடக் கூடாது.

ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்க்கூட்டமைப்பும் இணைந்து அமைக்கும் அரசாங்கத்தை தென்னிலங்கை மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். இவர்களால் தேசிய பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கும் புதிய அரசியலமைப்பை கொண்டு வர முடியாது. ஏற்கனவே ஏக்கிய, ஒருமித்த என்ற வசனங்களை போட்டு கடந்த தேர்தலில் பாடம் கற்பிக்கப்பட்டது.

அதனால் ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து அமைக்கும் அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வைக்காண முடியாது. இது கூட்டமைப்புக்கு வடக்கிலும் பாதிப்பை ஏற்படுத்தும். கூட்டமைப்பினால் வடக்கு- கிழக்கு மக்களுக்கு தேவையானதை சிறிதளவும் வழங்க முடியாமல் போய்விடும்.

சிங்கள பௌத்த மக்கள் எப்போதும் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் கூட்டமைப்புக்கு எதிராகவே இருப்பார்கள். எனவே இந்த அனைத்து விடயங்களையும் மனதில் கொண்டு அரசியல் ரீதியில் சிந்தித்து தமிழ்க் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்க வேண்டும்.

இந்த இடத்தில் கூட்டமைப்பு ஒரு எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தில் இருந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். அதனால் கூட்டமைப்பு நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பிரதமருக்கு எதிராக வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அடுத்து என்ன நடக்கும் என்பதனை கூறிவிட்டோம். முடிவு தமிழ்க் கூட்டமைப்பின் கைகளிலேயே உள்ளது என்பதனை வலியுறுத்துகின்றோம்.

இதேவேளை கரு ஜெயசூரிய அல்லது ரஞ்சித் மத்தும பண்டார போன்ற ஒருவரை பிரதமராக நியமித்து தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து. விரைவில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணமுடியும்என்பதனையும் கூட்டமைப்புக்கு கூற விரும்புகின்றோம். (இ-7)

---

### 9 பேருக்கும் 10 ஆம் திகதிவரை மறியல்

## கண்டியில் வன்முறை சீசீரிவி பதிவுகள் நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(கண்டி)

கண்டி மாவட்டத்திற்குட்பட்ட தெல்தெனிய திகன உள்ளிட்ட பல பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக தெரிவித்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 9 பேரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களை நேற்று தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களில் பொதுஜன முன்னணியிலிருந்து குண்டசாலை பிரதேச சபைக்கு தெரிவான சமந்த பெரேரா என அழைக்கப்படும் அரலிய சமந்தவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஒன்றிற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ள தமது கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான ஒன்றுகூடலில் பங்கேற்பதற்கான அனுமதியையே அவர் கோரியிருந்தார்.

மேலும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பான சீசீரிவி காணொலி பதிவுகள் நீதிமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டதோடு, குறித்த காணொலியில் மகாசோன் அமைப்பின் பிரதானி அமித் வீரசிங்கவும் காணப்படுகின்றார் என அறியப்பட்டதனை தொடர்ந்து நேற்று நீதிமன்றிற்கு சமுகமளிக்காத அமித் வீரசிங்கவை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

---

## பிரதமர் ரணிலின் வெற்றிக்கு மகிந்த தரப்பிலிருந்தும் ஆதரவு

### ஐ.தே.க.எம்.பி.நளின் தகவல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 120 வாக்குகள் வரை நிச்சயமாக கிடைக்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். மகிந்தவின் கட்சியிலிருந்தும் இதற்கான ஆதரவு கிடைக்குமென அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு. தாமரை மொட்டிலிருந்து (மகிந்த ஆதரவு பொதுஜன பெரமுன) 2 அல்லது மூன்று வாக்குகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. எப்படியும் இந்த பிரேரணைக்கு எதிராக நாம் 120 வாக்கு கள்வரை எடுத்து விடுவோம்.

இந்தப் பிரேரணையை ஏன் கொண்டுவந்தீர்கள் என மகிந்த தரப்பின் சிலர், அவர்களுக்குள்ளேயே அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். இந்தப் பிரேரணை வென்றாலும் தோற்றாலும் தமக்கு வெற்றியே என பொது எதிரணியின் உறுப்பினரான உதய கம்மன்பில கூறுகிறார். தங்களின் தோல்வியை இப் போதே அறிந்துகொண்டு தான் அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிடுகின்றனர். பிரேரணை தோற்றவுடன் இவ்வாறான கருத்துக் களையே வெளியிடப் போகின்றனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



---

### நாம் அஞ்சவில்லை

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பது உறுதியாம்-ஐ.தே.க.



(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பது உறுதியென ,கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வதற்கான சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோம் எனவும்அவர்தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து தமது கட்சி அஞ்சவில்லையென குறிப்பிட்ட அகிலவிராஜ், தாம் எதிர்பாராதவர்களிடமிருந்தும் தமக்கு ஆதரவு கிடைத்துள்ளதெனக் கூறினார்.

இந்நிலையில், பிரேரணையை தோற்கடித்த பின்னர், எதிர்வரும் 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலை வெற்றி கொள்வதற்கான சகல முன்னெடுப்புகளிலும் தமது கட்சி ஈடுபடுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'பத்ம பூஷன்' விருது பெற்றார் தோனி



இராணுவ கேர்னல் உடையில் வந்து பத்ம பூஷன் விருதை பெற்றார் மகேந்திரசிங் தோனி.

இந்திய அணியின் முன்னாள தலைவர் தோனி (வயது-37), கடந்த 2007 இல் 'ரி20' உலக கிண்ணம் வென்று கொடுத்த இவருக்கு, 'ராஜிவ் கேல் ரத்னா' விருது வழங்கப்பட்டது. 2009ல் 'பத்ம ஸ்ரீ' விருது பெற்றார்.

ஐ.சி.சி., சார்பில் வழங்கப்படும் சிறந்த வீரர் விருதை இரு முறை (2008, 2009) வென்ற முதல் வீரர் என்ற பெருமை இவருக்கே உண்டு. கபில்தேவுக்குப் (1983) பின், 28 ஆண்டுகள் கழித்து, 2011இல்ஒருநாள் உலக கிண்ணம் வென்று கொடுத்தார்.

இதையடுத்து, இந்திய இராணுவத்தின் கௌரவ 'லெப்டினென்ட் கேர்னல்' அந்தஸ்து வழங்கப்பட்டது. நேற்று தோனிக்கு, இந்தியாவின் மூன்றாவது சிறந்த 'பத்ம பூஷன்' விருதை ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் வழங்கினார்.

**கேர்னல் உடையில்...**

டில்லி, ஜனாதிபதி மாளிகையில் நடந்த விருது நிகழ்ச்சியில் இராணுவ கேர்னல் உடையில் பங்கேற்றார் தோனி. தனது பெயர் அறிவிக்கப்பட்டவுடன், மிடுக்காக நடந்து சென்று விருதினை பெற்றுக கொண்டார். ஸ்னூகர் மற்றும் பில்லியர்ட்ஸ் போட்டியில் உலக சம்பியன் பட்டம் வென்ற பங்கஜ் அத்வானிக்கும் பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.

**பத்தாவது வீரர்**

பத்ம பூஷன் விருது பெற்ற, 10ஆவது கிரிக்கெட் நட்சத்திரம் ஆனார் தோனி. இதற்கு முன் சி.கே.நாயுடு (1956), விழிநாகரம் (1958), வினு மன்கட் (1973), கவாஸகர் (1980), தியோதர், லாலா அமர்நாத், கபில்தேவ் (1991), சந்து போர்டே (2002), டிராவிட் (2013) இவ்விருது பெற்றனர்.

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லையா இலட்சுமி

குப்பிளான் வடக்கு, குப்பிளானைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா இலட்சுமி அவர்கள் 31.03.2018 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - முதலிச்சி தம்பதிகளின் அன்பு மகளும் செல்லையாவின் அன்பு மனைவியும் சந்திரசேகர் (ஜேர்மனி), சிவஞானசேகர் (சுவிஸ்லாந்து), லதாதேவி (இலங்கை), கருணாகரன் (கட்டார்), திருச்செந்தூர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (03.04.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(C-2098)

தகவல்:-
குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


இந்தோனேசியாவின் தலைநகரமான ஜகர்த்தாவில் (Grand Mercure Harmoni Hotel, Jakarta, Indonesia) 2017ம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வில் இன்று (03.04.2018) கலந்து கொள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் பருத்தித்துறை பிராந்தியத்தில் இருந்து பங்குபற்றும் ஆயுட் பிரிவு உத்தியோகத்தர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**Miss Thiyagarasa Mekala**
Gold Award - 2017
Point Pedro Branch



**Miss Rasanayaham Saranya**
(Economic Special - university of Jaffna)
MDRT Winner - 2016, 2017
Platinum Star Award - 2017
LIMRA IAP Silver Award
Nelliyady Branch



**Mrs Muralitharan Nishanthini**
Silver Award - 2017
Point Pedro Branch

வாழ்த்துவோர்:- Regional Manager
Business Development Manager's
Business Development Assistant Manager's
Business Development Officer's
Advisers
Sales Support Officer

union assurance
Trust in your tomorrow, today.

ANNUAL AWARDS 2017

Best Wishes

(3491)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டாம்

## ஜனாதிபதிக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகள் அழுத்தம்


(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டாம் என கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுள்ள தாக உள்ளகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தை 2020ஆம் ஆண்டு வரை கொண்டு செல்வதற்கான தேவையான அனைத்து ஒத் துழைப்புகள் வழங்கப்படும் எனவும் முரண்பாடுகளை தவிர்த்து செயற்படுமாறும் ஆலோசனை வழங்கப்பட் டுள்ளதாக அறியமுடிகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் உறுப்பினர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவுள்ள நிலையில், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண் டும் எனக் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி வருவதாகவும் கட்சித் தக வல்கள் தெரிவிக்கின்றன.

பிரேரணைக்கு ஆதர வாக வாக்களிக்க வேண்டும் என மகிந்த ராஜபக்ஷவை மையப்படுத்திய கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள், தொடர்ச் சியாக பிரசாரம் செய்து வரும் நிலையில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அதற்கு இணக்கம் தெரிவித்தார் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டிருந்தது.



ஆனாலும், கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜ தந்திரிகள் மற்றும் பொது அமைப்புகள் அழுத்தம் கொடு த்து வருவதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் கள் வாக்கெடுப்பின்போது கலந்துகொள்ள வேண்டிய அவசியம்இல்லையெனஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிடுவார் என எதிர் பார்க்கப்படுவதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை பிரேரணை க்கு ஆதரவாக வாக்களித்து மகிந்த ராஜபக்ஷவை மையப் படுத்திய கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை பிரதம ராக நியமிக்க வேண்டும் என கொழும்பில் உள்ள சீனத் தூதரக அதிகாரிகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுப்பதாகவும்தெரியவருகிறது.

இதனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதி ரான நம்பிக்கையில்லாப் பிரே ரணை தொடர்பாக ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, சீனா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுக ளின் கடும் அழுத்தங்களு க்கு உள்ளாகியிருப்பதாக வும் தெரியவருகிறது.

நாளை 4ஆம் திகதி புதன் கிழமை நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவா தம் நடைபெற்று வாக்கெ டுப்பு நடத்தப்படுமென நாடாளு மன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

## மாயவனூர் கிராம மக்களுடன் சந்திரிகா இன்று சந்திப்பு

தேசிய ஒருமைப்பாட்டிற் கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் (ONUR) தலைவி முன்னாள் ஜனாதி பதி திருமதி.சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க, வேலைத்திட்டங்களை பார் வையிடுவதற்காக கிளிநொ ச்சி மாவட்டத்திற்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் விஜயம் செய்வதோடு கிளிநொச்சி மாயவனூர் கிராம மக்களு டன் சந்திப்பு ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளார்.

வடமாகாண விவசாய அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு ONUR அலுவல கத்தின் அனுசரணையுடன் பொருளாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (Eco- nomic Engagement Pro gramme) கீழ் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவ ட்டங்களின் விவசாயத்துறை சார்பாக விவசாய கிணறுகள் அமைத்தல், புனரமைத்தல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை என்பவற்றிற்காக ரூபா 39.10 மில்லியன் செல வீனத்திலும் மற்றும் கால் நடை துறை சார்பாக கால் நடை வளர்ப்பாளர்களுக் கான உள்ளீடுகள் வழங்கு தலிற்கான ரூபா 8.63 மில் லியன் செலவீனத்திலும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத் தில் விவசாய கிணறுகள் அமைத்தல் வேலைத்திட்டத் தின் கீழ் 72 பயனாளிகளு க்கு ரூபா 7.86 மில்லியனும் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய் கைக்கான உள்ளீடுகள் வழங் குதல் வேலைத்திட்டத்தின் கீழ் 175 பயனாளிகளுக்கு ரூபா 12.75 மில்லியனும் கால்நடை அபிவிருத்தி துறை யின் கீழ் ஆடு வளர்ப்பாளர்க ளுக்கு உள்ளீடுகள் வழங்கு தலில் கிளிநொச்சி மாவட்டத் தில் 7 பயனாளிகளுக்கு ரூபா 0.35 மில்லியனும் மாடு வளர்ப்பாளர்களுக்கு உள் ளீடுகள் வழங்குதலில் கிளி நொச்சி மாவட்டத்தில் 17 பயனாளிகளுக்கு 1.7 மில்லி யனும் பண்ணை வளர்ப்பா ளர்களுக்கு (கோழி) உள்ளீடு கள் வழங்குதலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 0.3 மில்லிய னும்செலவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் தில் விவசாய துறையின் கீழ் விவசாய கிணறுகள் அமைத் தல் வேலைத்திட்டத்தின் 62 பயனாளிகளுக்கு ரூபா 9.56 மில்லியனும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்கான உள் ளீடுகள் வழங்குதல் வேலைத் திட்டத்தின் கீழ் 141 பயனாளி களுக்கு 8.6 மில்லியனும் ஆடு வளர்ப்பாளர்களுக்கு 25 பய னாளிகளுக்கு ரூபா 1.25 மில்லியனும் மாடு வளர்ப் பாளர்களுக்கு உள்ளீடுகள் 38 பயனாளிகளுக்கு ரூபா 3.68 மில்லியனும் முல் லைத்தீவு மாவட்டத்தில் கோழி ப்பண்ணை வளர்ப்பாளர் களுக்கு 27 பயனாளிகளும் ரூபா 1.35 மில்லியனும் செலவு செய்யப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட உதவித் தொகை வேலைத்திட்டங்களது முன்னேற்றம் தொடர்பாக வும் கிளிநொச்சி விஜயத்தின் போது சந்திரிகா பண் டாரநா யக்க குமாரதுங்கவும் அவரது குழுவினரும் பார்வையிட வுள்ளனர்.

2017ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கிரா மத்திலிருந்தும் 25 பயனாளி கள் தெரிவு செய்யப்பட்டு விவ சாயம் அல்லது கால்நடை அபிவிருத்திக்கான உதவி வழங்கப்படும் மேலும் 2017 ஆம் ஆண்டில் உதவியினைப் பெற்ற பழைய பயனாளிக ளிலி ருந்து 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு விவசாயம் சம்ப ந்தமான உதவிகள் பெற்றி ருப்பின் கால்நடை சார்ந்த உதவிகளையும் கால்நடை சார்ந்த உதவிகளைப் பெற்றி ருப்பின் விவசாயம் சார்ந்த உதவிகளும் வழங்கப்படும் என வடமாகாண விவசாயம் மற்றும் கால்நடை அபிவிரு த்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித் துள்ளார். (இ-7)

## இராசி பலன்

03.04.2018

பங்குனி 20, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு

திருதியை மாலை 6.14 மணிவரை

சுவாதி முற்பகல் 7.23 மணிவரை

சுபநேரம் 10.40-12.10 மணிவரை

இராகுகாலம் 3.10-4.40 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி மதியம் 2.50 மணிக்கு விரு-சந் | | |
| சனி, செவ் | குரு | சந் | |

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

**மேடம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், முக்கிய பொறுப்புக்களை காலைப் பொழுதே செய்து முடிப்பது வெற்றி தரும்.

**இடபம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேர லாம், செய்தொழில் மேன்மை யுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்:** ஆரோக்கியம் சம்பந்தப்ப ட்ட வகையில் இருந்த அச் சுறுத்தல்கள் அகலும், வீட்டை அழகாக வைத்தி ருக்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர் கள், நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் நாள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக் களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், விருந்தினர் களின் வருகையுண்டு, புதிய பொறுப்புக்கள் வந்து சேர லாம்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சுப தகவல்கள் வந்து சேர லாம், வீட்டுத் தேவைகள் பூர்த் தியாகும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப் புக்களைக் காணும் நாள், உற வினர்களின் நலனில் அக் கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும்.

**தனுசு:** தொழிலில் எதிர்பார்த்த மாற் றங்கள் ஏற்படலாம், சுப செல வுகள் அதிகரிக்கும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்பட லாம்.

**விருச்சிகம்:** பக்குவமாகப் பேசி காரியங் களைச் சாதித்துக் கொள்வீர் கள், பணவரவு திருப்தி தரும், பயணத்தால் பலனுண்டு, வழிபாடு குதூகலம் தரும்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப் புக்கள் கிடைக்கும் வாய்ப் புண்டு, உங்கள் பொறுமை க்கு இன்று பரிசு கிடைக் கும், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்த வல்லவர்களின் உதவியை நாடுவீர்கள், எடு த்த செயலை எளிதில் செய்து முடிப்பீர்கள், வாக்கு, மேன் மையுண்டு.

# ஈ.பி.டி.பியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் இழி செயலை செய்யமாட்டோம்

## சிறிதரன் எம்.பி.உறுதி



(யாழ்ப்பாணம்)

பொஸ்பரஸ் குண்டுகளையும் கொத்தணிக் குண்டுகளையும் வீசி எம்மக்களைக் கொத்துக் கொத்தாக கொன்றொழித்த போது அரசோடு துணை இராணுவமாகச் செயற்பட்ட ஈ.பி.டி.பியிடமும் சந்திரகுமாரிடமும் ஆதரவுக்கரம் நீட்டி ஆட்சி அமைக்கும் இழி செயலை நாம் ஒருபோதும் செய்ய மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழ் மக்களின் நீண்ட பெரும் விடுதலைப் போராட்ட வரலாற்றில் தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தம் இனத்தின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் தமிழர்கள் சிந்திய இரத்தமும் வியர்வையும் இன்றளவும் தமிழர்கள் சுமக்கும் வலிகளும் எண்ணிலடங்காதவை.

இருள் பொதிந்த இறுதிப் போருக்குள் அகப்பட்டுக்கொண்ட நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் உண்ண உணவின்றி உடுக்கத்துணியின்றி இயற்கைக் கடன் தீர்க்கக் கூட இடமில்லாமல் அலைந்த போது வன்னி மண்ணில் வெறும் 75,000 பேர் தான் உள்ளனர் என்ற அரசு உணவு கூட அனுப்பாமல் குழந்தைகளையும் வயோதிபர்களையும் காயப்பட்டவர்களையும் கர்ப்பவதிகளையும் பட்டினி போட்டு பாதுகாப்பு வலயம் என அறிவித்த பகுதிக்குள்ளேயே பொஸ்பரஸ் குண்டுகளையும் கொத்தணிக் குண்டுகளையும் வீசி எம் மக்களைக் கொத்துக் கொத்தாக கொன்றொழித்த போது அரசோடு துணை இராணுவமாகச் செயற்பட்ட ஈ.பி.டி.பியின் இடமும் சந்திரகுமாரிடமும் ஆதரவுக்கரம் நீட்டி ஆட்சி அமைக்கும் இழி செயலை கிளிநொச்சி மாவட்ட மக்களாகிய நாம் ஒருபோதும் செய்து விடமாட்டோம்.

தமிழர்கள் பல தசாப்த காலங்களாக இரத்தமும் கண்ணீரும் வியர்வையும் சிந்தி வளர்த்தெடுத்த விடுதலைப் பயிரை வேரோடு பிடுங்கியெறிந்துவிட்டு தமிழ் இனத்தினது இருப்பையே சிதைத்து சின்னாபின்னமாக்கிய சிங்கள அரசோடு சேர்ந்து வெற்றிவிழாக் கொண்டாடியும் 2011 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் இன அழிப்புக்கான போர்க்குற்ற விசாரணைக்கு அத்திபாரமிடப்பட்டபோது ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்த ஜெனிவாவின் முன்றலிலும் சந்திரகுமார் கிளிநொச்சி நகரத்திலும் இறுதிப்போரில் இறந்தவர்கள் அனைவரும் புலிகளேயன்றி பொதுமக்களல்ல என அப்போதைய அரசுக்கு ஒப்புக் கொடுத்ததை போரின் வலிகளை சுமந்துநிற்கும் தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்து விடப்போவதில்லை.

2006 ஆம் ஆண்டிலிருந்து இறுதிவரை யாழ்ப்பாண மண்ணில் 3000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டதற்கும் 1990 களில் யாழ். மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் கொப்பேகடுவவால் அழைத்துவரப்பட்ட 160 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மண்டைதீவு தோமையார் ஆலய முன்றல் கிணற்றிலும் செம்பாட்டுத் தோட்டக் கிணற்றிலும் தூக்கிவீசப்பட்டபோது அல்லைப்பிட்டியில் வைத்து உங்கள் பிள்ளைகளுக்கு நான் பாதுகாப்பு அளிக்கிறேன் எனக் கூறி அப்படுகொலைகளுக்கு காரணமான டக்ளஸ் தேவானந்தாவும் அவரது அடிவருடி சந்திரகுமாரும் எப்படி எம்மோடு சமபங்காளிகளாகிவிட முடியும்?

கரைச்சி பிரதேச சபையிலும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிலும் எமக்கு கிடைத்த பெரும்பான்மையின் அடிப்படையில் தலா ஒவ்வொரு ஆசனப்பற்றாக்குறை உண்டு என்பது உண்மையே என்றாலும் ஆட்சி அமைப்பதற்காக இணைந்து செயற்படுமாறு நாம் ஒருபோதும் அவர்களை கோரவுமில்லை. இனி எப்போதும் அவ்வாறு கோரப்போவதுமில்லை. மாறாக இந்த இரண்டு சபைகளிலும் எமது கட்சி தவிர்ந்த ஏனையவர்கள் எல்லோரும் இணைந்து ஆட்சி அமைத்தால் நாங்கள் ஜனநாயக பண்புகளின் அடிப்படையில் ஆரோக்கியமுள்ள எதிர்க்கட்சியாக எமது பணியை எம்மக்களுக்கு ஆற்றுவோம். தேர்தல்களில் வெற்றி தோல்வி என்பது இயல்பானதே. இவ்விரு சம்பவங்களும் நடக்கின்றபோது மக்களும் நாங்களும் விட்ட தவறுகளைத் திருத்திக் கொள்கிறோம். அதற்கான காலமௌனிப்பாக இன்னும் நான்கு ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமானால் அதற்கும் நாம் தைரியமான எண்ணத்தோடு தயாராக இருக்கின்றோம்.

கொள்கைக்காக குப்பி கடித்து உயிர் மாய்த்த மாவீரர்களின் கந்தக மண்ணிலே எதிரிகளை விட துரோகிகளே மன்னிக்கப்படமுடியாதவர்கள். அத்தகைய துரோகமிழைத்து எம் இனத்தை அழித்தவர்களுடன் அணி சேர நாம் ஒருபோதும் தயாரில்லை. நாங்கள் எடுக்கும் முடிவு சரியா? பிழையா? என்பதை வரலாறும் எம் தமிழ் மக்களும் தீர்மானிக்கட்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# குளியாப்பிட்டிய பிரதேச சபையில் மொட்டும், மயிலும் இணைவு





(குருநாகல்)

குருநாகல் மாவட்ட குளியாப்பிட்டிய பிரதேச சபையின் ஆட்சியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் (மொட்டு), அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் இணைந்து கைப்பற்றிக்கொண்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த (மொட்டு) விஜயசிறி ஏக்கநாயக்க 21 வாக்குகளைப் பெற்று தவிசாளராகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த எம்.சி.இர்பான் எதுவித போட்டியுமின்றி, ஏகமனதாகப் பிரதித் தவிசாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தவிசாளரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மகிந்த புஷ்ப குமார 16 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

குளியாப்பிட்டிய பிரதேச சபையில் 3 உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், 2 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியும், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த மனோஜ் என்பவரும் வாக்களிப்பில் பங்கேற்காது நடுநிலை வகித்தனர்.

பிரதித் தவிசாளர் தெரிவின் போது, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஏ.எஸ்.எம். சாஜஹான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சந்தன புஷ்பகுமாரவை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் இர்பானுக்கு எதிராகப் போட்டியில் கலந்து கொள்ள பிரேரித்த போதும், சந்தன புஷ்பகுமார அதனை நிராகரித்து போட்டியிலிருந்து விலகினார்.

குளியாப்பிட்டிய பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள, பொதுஜன பெரமுனவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் தலா 20 மற்றும் 2 ஆசனங்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஒற்றை வாக்கில் ஆட்சியைப் பிடித்த ரோஸியின் மேயர் பதவி பறிபோகுமா?



(கொழும்பு)


ஒற்றை வாக்கின் மூலம் கொழும்பு மாநகர சபையை ஆளும் அதிகாரத்தைப் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் மேயர் ரோஸி சேனநாயக்க, தனது பதவியை தக்கவைத்துக் கொள்வதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.கவின் ஆட்சி தொடர தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களின் ஆதரவு அவசியம் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ள நிலையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் ஆட்சி தொடர தமது கட்சியின் பத்து உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயமானது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் மனோ கணேசன், எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அதில் ஒரு உறுப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும் ரோஸி சேனநாயக்கவின் மேயர் பதவி பறிபோகும் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், இது குறித்து ஐக்கிய தேசிய கட்சி இதுவரை தம்முடன் எவ்வித பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடாமை குறித்து அமைச்சர் அதிருப்தியும் வெளியிட்டுள்ளார். (இ-7)

# பசுபிக் கடலில் விழுந்தது சீன விண்வெளி நிலையம்





(பீஜிங்)

விண்வெளியில் கட்டுப்பாடற்று சுற்றிய சீன விண்வெளி நிலையத்தின் பாகங்கள் தெற்கு பசுபிக் கடல் பகுதியில் நேற்று விழுந்தது.

சீனா 2011ஆம் ஆண்டு ஏவிய 'டியான்காங்-1' என்ற விண்வெளி நிலையம் செயலற்றுப்போய்விட்டதாக சீனா கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி அறிவித்தது. அதன்பின்னர் விண்வெளியில் கட்டுப்பாடற்று சுற்றி வந்துகொண்டிருந்த இந்த விண்வெளி நிலையம் பூமியை நோக்கி வரத் தொடங்கியது.

மார்ச் 30ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 2ஆம் திகதிக்குள் டியான்காங்-1 ஆராய்ச்சி நிலையம், பூமியில் விழும் என ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் எதிர்வு கூறியிருந்தது.

இந்நிலையில் பூமியின் வளிமண்டல பகுதிக்குள் நேற்று நுழைந்த விண்வெளி நிலையம், அதிவேகமாக பூமியை நோக்கி பாய்ந்து வந்தபோது காற்றின் உராய்வினால் அதன் பெரும்பாலான பகுதிகள் எரிந்து விட்டன.

விண்வெளி ஆய்வுக்கூடத்தின் பாகங்கள் தெற்கு பசுபிக் பகுதியில் விழுந்ததாக சீனாவின் விண்வெளி பொறியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது. உள்ளூர் நேரப்படி 10.15 மணியளவில் பேருந்து அளவிலான பாகம் பூமியில் விழுந்திருப்பதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவை பெரும்பாலும் விண்வெளி நிலையத்தின் என்ஜின் போன்ற கனமான பாகமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. தகிட்டி தீவின் வடமேற்கில் விழுந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. பூமியில் விழுந்த பாகங்களை தேடும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலான பாகங்கள் அழிந்துவிட்ட நிலையில், தெற்கு பசுபிக்கில் தண்ணீர் நிறைந்த பகுதியில் விண்வெளி ஆய்வுக்கூட பாகங்கள் விழுந்திருப்பதால் பூமிக்கு பெரிய அளவில் பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

201 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், 29ஆம் திகதி 'டியான்காங்-1' விண்வெளி நிலையம் நிறுவப்பட்டது. இதுதான் சீனாவின் முதல் விண்வெளி ஆய்வுகூடம் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# 40TH ANNIVERSARY OF JAFFNA MEDICAL FACULTY

யாழ் மருத்துவபீடத்தின் 40ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு வடமாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து யாழ் மருத்துவபீடம் நடாத்தும்

## "மாபெரும் மருத்துவக்கண்காட்சி"

YARL

MED EX - 2018

*"health towards new horizon"*

இடம் : யாழ் மருத்துவபீடம்

திகதி : 4 முதல் 7 சித்திரை 2018 வரை

நேரம் : காலை 9.00 - மாலை 7.00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Evolution Events and Corporate Services

KAMAL

(இ)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

**ஆசிரியர் தேவை**

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையத்திற்கு கணிதம், தமிழ், சுகாதாரம், வரலாறு, புவியியல், சைவசமயம், கிறிஸ்தவம் (தரம் 1-11 வரை) கற்பிக்க கூடியவர்கள் தேவை.

**தொடர்பு:**

**0770872903, 0217917791**

(சி-2088)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி
பிரஞ்சினி விஜயரட்சகன் MED


28.03.2018 அன்று தேசிய கல்வி நிறுவகத்தால் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று கல்விச் சமூகத்திற்கு பணியாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.




திருமதி
சந்திரகாந்தா தேவதாஸ்
(BED)



திருமதி
ராகினி பிரசாந்தன்
(BED)


பாடசாலைச் சமூகம்
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை,
கொக்குவில்.

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

- பிறப்பு: 1981 இந்து; நட்சத்திரம்: புனர்பூசம்; கி.பா: 27 செவ் 2 இல்; உயரம்: 5'6"; தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்; தொ.இ: B/7557
- பிறப்பு: 1989 இந்து; நட்சத்திரம்: கேட்டை; கி.பா: செவ் 1 இல்; உயரம்: 5'6"; தகைமை/தொழில்: Diploma/ தனியார் தொழில்; தொ.இ: B/7559
- பிறப்பு: 1984 இந்து; நட்சத்திரம்: விசாகம்; உயரம்: 6'; தகைமை/தொழில்: MSc Eng/லண்டன்; தொ.இ: B/7560
- பிறப்பு: 1983 இந்து; நட்சத்திரம்: உத்தராடம்; கி.பா: 41; உயரம்: 5'5"; தகைமை/தொழில்: BBA/அரச தொழில்; தொ.இ: B/7564

**இவர்களுக்கு மணமகன் தேவை**

- பிறப்பு: 1987 இந்து; நட்சத்திரம்: அனுசம்; கி.பா: 13 செவ் 4 இல்; உயரம்: 150cm; தகைமை/தொழில்: O/L; தொ.இ: G/6706
- பிறப்பு: 1991 இந்து; நட்சத்திரம்: பூராடம்; கி.பா: 26; உயரம்: 5'3"; தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்; தொ.இ: G/6707
- பிறப்பு: 1987 இந்து; நட்சத்திரம்: அத்தம்; கி.பா: 42 செவ் 7 இல்; உயரம்: 5'2"; தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்; தொ.இ: G/6715
- பிறப்பு: 1989 இந்து; நட்சத்திரம்: அத்தம்; கி.பா: சூரிசெவ் 10 இல்; உயரம்: 162cm; தகைமை/தொழில்: O/L/அரச தொழில்; தொ.இ: G/6716

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கோரி கருணை மனுவில் மாணவர்கள் கையொப்பம்



(கண்டாவளை)

ஆனந்த சுதாகரனின் விடுதலையைக் கோரி கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் கருணை மகஜர் ஒன்றை நேற்றையதினம் அனுப்பி வைத்தனர். நேற்றுக் காலை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் மாணவர்கள் குறித்த கருணை மகஜரில் கையொப்பம் இட்டனர்.

ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் இருவரும் கல்வி பயிலும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்கள், அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் நேற்றையதினம் கையொப்பம் இடும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். இதன்போது 2500 இற்கு மேற்பட்ட கையொப்பங்கள் திரட்டப்பட்டன. நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையினர், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கல்லூரி அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கத்தின் தலைமையில் கையொப்பம் பெறப்பட்ட மகஜர் நேற்று இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கல்லூரி முதல்வர்,

ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் இருவரும் இங்கேயே கல்வி கற்கின்றனர். இவர்களின் கடந்தகால செயற்பாடுகளுக்கு மாறாக தற்போது மாணவர்களின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. கல்வி கற்க விருப்பமற்றவர்களாக, அதிக யோசனையில் உள்ளவர்களாகவும், தனிமையை விரும்புபவர்களாகவும் இவர்கள் இருப்பதை கண்டு பாடசாலைச் சமூகமாகிய நாம் மிகவும் கவலை அடைகின்றோம். இவர்களின் இந்த நிலையை மாற்றுவதற்கு ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய சம்பந்தப்பட்டவர்களை பாடசாலை சமூகமாக வேண்டுகின்றோம் என்றார்.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் குறிப்பிடுகையில்,

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் குறிப்பிடுகையில், இந்த மாணவர்களின் நிலை போன்று யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இவ்வாறு மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். இதற்காக நாம் 3 இலட்சத்திற்கு அதிக கையெழுத்துக்களை கல்விச் சமூகம் சார்பில் பெற்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஊடாக வடக்கு மாகாண ஆளுநர், ஐக்கிய நாடுகள் சபைக்கும், ஜனாதிபதிக்கும் அகிம்சை வழியில் மகஜரை அனுப்ப உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7-315-312)




# பூநகரி பிரதேச சபையின் முதலாவது அமர்வு நாளை

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் முதலாவது கன்னி அமர்வு (முதலாவது சபைக் கூட்டம்) நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் புதிய தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் என பூநகரி பிரதேச சபை செயலாளர் மு.இராஜகோபால் சகல உறுப்பினர் களுக்கும் அறிவித்துள்ளார். தமிழ்க் கூட்டமைப்பின் 11 உறுப்பினர்கள் 11 வட்டாரங்களில் வெற்றி பெற்ற நிலையில் போட்டியிட்ட ஏனைய கட்சிகளுக்கு கிடைத்த போனஸ் உறுப்பினர் 9 பேருடன் 20 உறுப்பினர்களுடன் சபையின் முதல் அமர்வு நடைபெறவுள்ளமையும் கடந்த வாரம் இவ் உறுப்பினர்கள் 20 பேரும் பதவி ஏற்கும் நிகழ்வு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-84)





வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் வவுனியா– ஆங்கிலச் சங்கமும் இணைந்து நடத்திய யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா சிறிகணேசனின் இரு மொழி பெயர்ப்பு நூல்கள் கடந்த 31 ஆம் திகதி வவுனியா சுத்தானந்தா இந்து கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடை பெற்றது. நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் வழங்கினார்.

(படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

# மின்கம்பத்தை இடம் மாற்றி அமைக்குமாறு நகர மற்றும் மின்சாரசபையினருக்கு கடிதம்

(பூநகரி)

வவுனியா சின்னப்புதுக்குளம் அலகரை 2ஆம் ஒழுங்கையில் காணப்படும் மின்கம்பம் ஒன்று கடந்த ஐந்து வருடங்களாக வீதியில் போக்குவரத்திற்கு இடையூறாகக் காணப்படுகின்றது.



இவ்விடயம் தொடர்பாக நகர சபை, மின்சார சபையினருக்கு தெரியப்படுத்திய போதிலும் மின்சார சபையினர் நகரசபையினரை மின்கம்பத்தை அகற்றுமாறும் நகர சபையின் மின்சார சபையினரை குறித்த மின்கம்பத்தினை அகற்றுமாறு மாறி மாறி இருபகுதியினரும் கடிதம் பரிமாறி வருகின்றார்களே தவிர இருவரும் குறித்த மின்கம்பத்தினை அகற்ற எவ்வித நடவடிக்கையும் இன்றுவரையில் மேற்கொள்ளவில்லை. குறித்த வீதியில் காணப்படும் மின்கம்பத்தினால் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. தற்போது குறித்த வீதி அகலப்படுத்தப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்ற நிலையில் மின்கம்பத்தினை அகற்றி போக்குவரத்திற்கு இடையூறு இன்றி வேலியின் கரையோரத்தில் நாட்டித்தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சின்னப் புதுக்குளம் அலகரை 2 ஆம் ஒழுங்கையில் மதகுடன் காணப்படும் மின்கம்பமானது கடந்த ஐந்து வருடங்களாக அவ்விடத்தில் காணப்படுகின்றபோதிலும் இதனை அகற்றி தமது போக்குவரத்திற்கு இலகுபடுத்தித் தருமாறு கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து நகரசபையினருக்கும் மின்சார சபையினருக்கும் கடிதங்கள் பல அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுன. (7-281)

# கிளி. மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது அபிவிருத்திக்கூட்டம்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்றையதினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த வருடத்திற்கான முதலாவது மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் ஆகும்.

இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மறைந்த முன்னாள் கரைச்சிப் பிரதேச செயலாளரும், கண்டாவளை பிரதேச செயலாளருமான கே.நாகேஸ்வரனுக்கு ஒரு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இன்றைய அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (7)

# பூநகரி பிரதேசத்தில் புத்தாண்டு தின நிகழ்வுகள்

(பூநகரி)

எதிர்வரும் தமிழ்–சிங்கள புத்தாண்ட தினத்தையொட்டி பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி பிரதேச செயலகமும் பூநகரி பொலிஸ் பிரிவின் 65 ஆவது படைப் பிரிவினரும் இணைந்து நடத்தும் புத்தாண்டு தின நிகழ்வுகள் நாளைமறுதினம் 5 ஆம் திகதி அதிகாலை தொடக்கம் நள்ளிரவு வரை பூநகரி வாடியடி நகர்ப்பகுதியிலுள்ள கோட்டை மைதானத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 5 ஆம் திகதி அதிகாலை 5 மணி முதல் மரதன் ஓட்டம், ஆண்–பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, சிறுவர்களுக்கான பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் மைதான நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளதால் பூநகரி பிரதேசத்தைச் சொந்த வதிவிடமாகக் கொண்ட யாவரும் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்று பெறுமதிமிக்க பரிசில்களை பெற்றுக் கொள்ளுமாறு பதாகைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவோர் அன்றையதினம் 5.30 மணிக்கு முன்பாக மைதானத்திற்கு சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் மேலும் அறவித்துள்ளனர். (7-84)

# வெற்றியளித்தது கொல்லவிளாங்குளம்





முல்லைத்தீவு மாவட்டத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 2016 ஆம் ஆண்டு 145 பயனாளிகளுக்கும் 2017ஆம் ஆண்டு 30 பயனாளிகளுக்கும் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்பு கிராமங்களை உருவாக்கு முகமாகவும் 60 பயனாளிகளுக்குமாக 1.07 மில்லியன் நிதியீட்டத்தில் தேனீ வளர்ப்பினை ஊக்குவிக்கு முகமாக உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த வகையில் பாலிநகர் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 2016ஆம் ஆண்டு 05 பயனாளிகளும் 2017ஆம் ஆண்டு 15 பயனாளிகளும் தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுமாக தேனீ வளர்ப்பில் ஊக்குவிக்கப்பட்டிருந்தனர்.

### அறிமுகம்

தேனீக்களில் பல்வேறு வகைப்பட்ட இனங்கள் காணப்படுகின்றன. இருளான இடங்களில் நீண்டகாலம் வாழக்கூடிய ஒன்றுக்கொன்று சமாந்தரமாகவதை அமைப்புக்களைக் கொண்ட தேனீக்களையே வளர்க்கமுடியும் அதனாலேயே வளர்ப்பதற்கான இனமாக பொந்துத் தேனீ அடையாளப்படுத்தப்படுகிறது. இவ்வாறான தேனீக்களைப் பிடித்து பெட்டிகளில் வளர்ப்பது இலாபகரமானதும் கூட அல்லது ஏற்கனவே உள்ள தேனீக் குடிகளில் இருந்து பிரித்து எடுப்பதன் மூலமும் தேனீக் குடிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தேனீக் குடித்தொகைகளை பிடித்து நிலைப்படுத்துவதற்கு குடித்தொகைகள் விருத்தியடைந்து காணப்படும் காலமே பொருத்தமானதாகும். அதிகளவு பூக்கள் மகரந்தங்கள் உள்ள போதே தேனீக் குடித்தொகைகள் விருத்தியடைந்தும் காணப்படும்.


### தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம்

ஆதிகாலத்திலிருந்தே தேனீக்களிலிருந்து மனிதன் பல்வேறு விதமான பயன்களைப் பெற்றுவந்துள்ளான். அவற்றுள் தேன், மகரந்தம், மெழுகு, ராஜபாகு, விஸம், என்பனவற்றை முக்கியமானவையாகக் கூறலாம். விவசாயத்தில் தேனீக்களால் செய்யப்படும் மிகச் சிறந்த சேவை மகரந்த சேர்க்கையாகும். தேனீக்களிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த பண்புகளாக முன்மாதிரியான நடத்தை, சேமிக்கும் பழக்கம் என்பன காணப்படுகின்றன.

### தேனீ வளர்ப்பில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்

தேனீ வளர்ப்புப் பெட்டி

தேனீ வளர்ப்பு பெட்டிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தேனீ வளர்ப்பு இலகுவாகின்றது. தேனீக்கள் வாழும் சூழலையும் வாழ்க்கை முறைமையையும் அடிப்படையாகக் கொண்டு பெட்டிகள் அமைக்கப்படுகின்றது. பொதுவாக தேனீப் பெட்டியானது அடித்தட்டு,வதைப்பெட்டி, தேன்பெட்டி, சிகைப்பலகை, வாயில் தகடு, கூரை ஆகிய பகுதிகளைக் கொண்டிருக்கும்.




துருத்தி (புகையூட்டி)

புகையூட்டி மூலம் புகையூட்டப்பட்டு தேனீக்கள் அமைதியடையச் செய்யப்படுகின்றன. பொதுவாக தென்னம் தும்பு புகையூட்டலுக்காக பாவிக்கப்படும். நச்சுத்தன்மையான புகையிலை போன்ற பொருட்களைப் பாவிப்பதை தவிர்த்தல் கட்டாயமானதாகும்.

### தேன் பிரித்தெடுக்கும் கருவி

மேற்பெட்டியிலுள்ள தேன் வதைகளுக்கு சேதம் ஏற்படாதவாறு வதைகளில் இருந்து தேன் பிரித்தெடுப்பதற்கு இவ் உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு தேனை பிரித்தெடுப்பதன் மூலம் தேன் வதைகளை மீளவும் பயன்படுத்தலாம். இதனால் வதைகளை கட்டுவதற்கான நேரம், உழைப்பு வீணாகாமல் தேன் சேமிப்புநடைபெறும். மேலும் சுத்தமான தேனையும் பெற்றுக்கொள்ளலாம்.

முகவலை



தேனீக்கள் கொண்டு செல்லும் பெட்டி



### தேனீக் குடிகளை பராமரித்தல்

தேனீக் குடிகளை வீட்டிற்கு அண்மையாக இலகுவில் கண்காணிக்கக் கூடியவாறுள்ள இடத்தில் அமைப்பதே சிறந்ததாகும். தேனீக் குடியின் முன்வாயில் காற்றுவீசும் திசைக்கு சமாந்தரமாகவும் மழைகாலங்களில் நனையாதவாறும் வெப்பத்தில் பாதிக்கப்படாதவாறும் பெட்டிகளை வைத்தல் வேண்டும். பெட்டிகளை வைக்கும் போது நிலத்தில் சிறுநீர்த் தொட்டியமைத்து உறுதியான ஆதாரமொன்றை வழங்கி குடிகளை இலகுவாக பராமரிக்கவும் எறும்பு, பல்லி, ஓணான் மற்றும் கரப்பொத்தான் போன்றவற்றினால்பாதிப்பு ஏற்படாதவாறும் பாதுகாப்பாக வைத்தல் அவசியமாகின்றது.

புதிய சமுதாயத்தை நிலைப்படுத்தும் பொழுது முட்டையிட்டு குஞ்சுகள் வெளிவரும் வரையும் தேன் பிரித்தெடுத்த பின்னரும் இராணித் தடைகளை வைப்பது மிக அவசியமானதாகும்.

தேனீக் குடிகளுக்கு அருகில் பட்டாசுகொளுத்துதல், குப்பைகளை எரித்தல், இரசாயனங்கள் விசுறுதல், மதுபானம் அருந்துதல், ஒலிகளை எழுப்புதல் என்பனவற்றை முற்றாக தவிர்த்தல் வேண்டும்.

### உணவூட்டல்

தேன் உற்பத்திக் காலத்தினை தொடர்ந்து வரும் காலங்களிலேயே குடித்தொகைகளை பராமரிப்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். இக்காலத்திலேயே குடிகள் வேறு பிரதேசங்களுக்கு தமது இருப்பிடத்தினை மாற்றிக் கொள்கின்றன. இதனை தடுக்கும் செயன்முறையில் உணவூட்டல் மிக முக்கியமான தொன்றாக அமைகின்றது. தேனீக்களுக்கு தேவையான உணவுகளை தயாரித்து வழங்குவதனூடாக போதியளவு உணவு கிடைத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். செயற்கை உணவுகளாக சீனிக் கரைசல், கரும்புச்சாறு மற்றும் பழக்கலவைகளை வழங்கலாம்.

தேனீக்களுக்கான உணவூட்டலில் சீனிக் கரைசலானது சீனி ஒரு பங்கும் கொதித்தாறிய நீர் ஒரு பங்கும் சேர்த்து நன்கு கரைத்து சிரட்டையில் அல்லது துளையிடப்பட்ட போத்தலில் தலைகீழாக கவிழ்த்து வைப்பதனூடாக மேற்கொள்ளலாம். சீனிக் கரைசல் ஒவ்வொருநாளும் மாற்றுதல் அவசியமானதாகும். கரும்புச்சாறு மற்றும் பழச்சாறு வழங்கும்போது உடனடியாக தயாரித்து மாலை வேளைகளில் வழங்குவது சிறந்ததாகும்.

### பூச்சித் தாக்கம்

தேனீ வளர்ப்பில் பொதுவாக மெழுகு அந்துக்களின் (Galleria mellonella, Achroiagrisella)தாக்கம் காணப்படுகின்றது. இவ் அந்துக்கள் குடித்தொகை வதைகளில் முட்டையிடுகின்றன. 5 நாட்களில் முட்டைகள் பொரித்து தேனீக்களின் குடம்பிகளை உண்பதுடன் வதைகளையும் சேதப்படுத்துகின்றன.

தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு குடிகள் ஆரோக்கியமானதாகவும் சுறுசுறுப்பானதாகவும் இருந்தாலே போதுமானது.

பெட்டியின் அடிப்பலகையை அடிக்கடி அவதானிக்கும் போது வதைகளின் துகள்கள் காணப்படின் வதைகளைப் பரிசோதித்து சேதமடைந்த வதைகளை அகற்றுவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும்.

### பூக்கள்



பொதுவாக தேனீக்களினால் தென்னை, வீரை, இலுப்பை, விளாத்தி, முதிரை, புளி, முருங்கை, வாகை, வாழை, ஜாம்மரங்களின் பூக்கள் மற்றும் அவரையின பூக்களின் அமுதம், மகரந்தம் சேகரிக்கப்படுகின்றது. குறைந்தளவு பராமரிப்புடன் வளரக்கூடிய "ஜப்பான் றோஸ்" என அழைக்கப்படும் போர்ட்லேகாகிராண்டிஃப்ளோரா (Portulacagrandiflora) பூக்களைப் பயன்படுத்தும் போது அதிகளவு மகரந்தங்கள் கிடைக்கக் கூடியதாகவிருக்கும். மேலும் இப் பூச்செடிகள் வருடம் பூராகவும் பூக்களைக் கொண்டிருப்பதனால் மகரந்தம் தொடர்ச்சியாக கிடைக்கக்கூடியதாகவுமிருக்கும்.

### கொல்லவிளாங்குளம் கிராத்தில் எவ்வாறு வெற்றியளித்தது என்பதனை அடுத்து நோக்குவோம்

முல்லைத்தீவு அதிகளவான வனப் பிரதேசத்தினை கொண்ட ஒரு மாவட்டம் என்பது யாவரும் அறிந்ததே. மாவட்டத்தின் மேற்குப்பகுதியான மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள வனம் சார்ந்த கிராமம் கொல்லவிளாங்குளம் கிராமமாகும். இயற்கைக் காடுகள் மத்தியிலே நீர்த் தேக்கங்கள் சூழவுள்ள வளம் மிக்க கிராமங்களில் ஒன்றாகும். இக் கிராம மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பினில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இப் பிரதேசத்தினை சூழ வனப்பகுதி காணப்படுவதனால் இயற்கையாகவே தேனீ குடித்தொகைகள் காணப்படுகின்றன. இப் பிரதேச மக்களில் சிலர் வாழ்வாதாரமாக காடுகளில் தேன் எடுத்து விற்பனை செய்தும் வருகின்றனர். ஆனாலும் முறையற்ற விதத்தில் தேன் எடுப்பதனால் பெருமளவு குடிகள் அழிக்கப்படுகின்றன. பொதுவாக தேன் எடுக்கும் போது தேனீக் குடிகளை கலைத்து விடும் நோக்கில் உயிருள்ள மரங்களை வெட்டுதல், புகையூட்டல், நெருப்பு வைத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி வகுப்புக்களினாலும் களவிஜயங்களினாலும் குறித்த கிராம விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டி இவ்வாறான குடித்தொகை அழிவுகள் தடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் தொடர்ச்சியாக தேனை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியமையினால் வருமானம் அதிகரித்துள்ளது. இவ்வாறாகவே குறித்த கிராம மக்கள் தேனீ வளர்ப்பில் ஆர்வத்துடன் ஈடுபடலாயினர்.

தேனீ வளர்ப்பினை மேலும் விஸ்தரிக்குமுகமாக கிராம இளைஞர்களை ஒருங்கிணைத்து "ஆரோக்கியா" எனும் பெயரில் இளைஞர் விவசாயக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இக் கழகமானது தேனீ வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு தேனீக் குடிகளை பிடித்து வழங்குதல், குடிகளைப் பிரித்து வழங்குதல், தேனை சந்தைப்படுத்தல் மற்றும் தேனீ வளர்ப்பு தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இக் கழக உறுப்பினர்களினால் மண்பானைகளில் குடித்தொகைகளை பிடிக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மண்பானையானது மேற்பகுதி கீழ்ப்பகுதியாக வெட்டப்பட்டு மீண்டும் தற்காலிகமாக பொருத்தப்படுகிறது.

ஏனெனில் குடிகள் பானையிலிருந்து பெட்டிக்கு மாற்றும் போது குழப்பமடைவதை தவிர்ப்பதற்காகவே வெட்டப்பட்டு மீளப் பொருத்தப்படுகின்றது. பானையின் உட்பகுதியில் வதையில் மெழுகு பூசப்பட்டு குளிர்மையான பிரதேச மரங்களில் கட்டி விடப்படும். இவ்வாறு கட்டிவிடப்படும் பானைகளில் குடிகள் தாமாகவே உள் வருகின்றன. இவ்வாறு பிடிக்கப்படும் குடிகள் 2500 ரூபா விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. கழகத்தின் தலைவராக சுகுமார் மதன்ராஜ் என்பவரும் செயலாளராக மாயராசா விஜிந்தன் என்பவரும் செயற்படுகின்றனர்.

மேலும் கழகத்தின் ஆலோசராகவும் தேனீ வளர்ப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருபவருமாகிய அப்புக்குட்டி தருமகுலசிங்கம் வழிநடத்தி வருகின்றார்.

### இலட்சனை

உற்பத்தி செய்யப்படும் தேன் "ஆரோக்கியா" சுத்தமான தேன் எனும் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது.

தேனீ வளர்ப்பு செயற்றிட்டமானது கொல்லவிளாங்குளம் கிராமத்தில் வெற்றிய ளித்தமையினால் தற்போது அருகிலுள்ள கிராமமான வன்னிவிளாங்குளம் கிராம விவசாயிகளும் ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

### தேன் அறுவடை

தேனீ வளர்ப்பில் தேனீக் குடித்தொகை நிலைப்படுத்தி ஆரோக்கியமான குடித்தொகைகள் மற்றும் போதியளவு உணவு காணப்படும் போது மூன்றாம் மாதத்திலிருந்து தேனைப் பெற்றுக் கொள்ளலாம். பிரித்தெடுக்கும் உபகரணம் மூலம் தேன் எடுக்கும் போது வதைகளை மீளப் பயன்படுத்தினால் 1- 1 ½ மாதங்கள் இடைவெளியில் 1 ½ -2 போத்தல் தேனைப் பெற்றுக் கொள்ளலாம்.

### தேனீ வளர்ப்பதற்கான வாய்ப்புக்கள்

தேனீ வளர்ப்பை ஆரம்பிக்கும் போது தேனீக்களுக்கான மகரந்தத்தையும் அமுதத்தையும் வருடம் முழுவதும் உற்பத்தி செய்யும் தாவரங்கள் உள்ள இடங்களில் ஆரம்பிக்கலாம்.

பொழுதுபோக்காக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஈடுபடலாம்.

குறைந்தளவு முதலீட்டுடன் ஆரம்பிக்கக்கூடியதும் மேலதிக வருமானம் தரக் கூடியதுமாகும்.

"ஆரோக்கியாவுடன் இணைந்து ஆரோக்கியமாக வாழ்வோம்"

இ.மாலினி -பாடவிதான உத்தியோகத்தர் (பூங்கனியியல்)
கி.கீர்த்திகன் -தொழில் நுட்ப உதவியாளர்(விவசாயம்)
பொ.அற்புதச்சந்திரன் -பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், முல்லைத்தீவு.

# மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தக் கூடாது

## கபேயின் பணிப்பாளர் கீர்த்தி வலியுறுத்து



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மையே கலப்புத் தேர்தல் முறை பிழையானதென விமர்சனத்துக்குள்ளாகக் காரணம் என்றும் இதனைக் காரணம் காட்டி மாகாணசபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படக் கூடாது எனவும் கபே அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

"2017 ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்துக்கு அமைய மாகாண சபைத் தேர்தலை கலப்பு முறையில் நடத்தலாம். ஆனால் மாகாண சபைத் தேர்தல் நடத்துவது குறித்து அரசாங்கம் இது வரையில் எந்தவிதமான அறிவிப்பையும் விடுக்காமல் உள்ளது.

பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் அப்பிரேரணைக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளமை போன்றன மாகாண சபைத் தேர்தலில் பாரிய தாக்கத்தினை செலுத்தியுள்ளன.

இந்த நெருக்கடி நிலைமையினை மையமாகக் கொண்டு மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரிக்கோப்பு திறக்கப்படும்

## நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

புதிய உள்நாட்டு வருவாய் சட்டம் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் பிரகாரம், 18 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் புதிய வரிக்கான கோப்பு ஒன்று திறக்கப்படும் என்றும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டமூலம் அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பளங்கள் மீதான வரி செலுத்தல் திருத்தப்பட்டுள்ளது. அதுவும் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. புதிய திருத்தத்தின் பிரகாரம் சம்பாதிக்கும் போது தற்போது அறவிடப்படும் செலுத்த வேண்டிய வரி எல்லையானது வருடாந்த சம்பளத்தில் 7.5 இலட்சம் ரூபாய் முதல் 12 இலட்சம் ரூபாய் வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், தற்போது வருமான வரி செலுத்துகின்ற ஒரு பிரிவினர் திருத்தப்பட்ட உள்நாட்டு வருவாய் சட்டமூலத்தின் ஊடாக விலக்களிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. வருடாந்த வருமானம் 12 இலட்சம் ரூபாய் முதல் அதிகரிக்கப்படும் முதலாவது 6 இலட்சம் ரூபாய்க்கு 4 சதவீத வரி அறிவிடப்படும். அதன் பின்னர் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு 6 இலட்சம் ரூபாய்க்கும் முறையே, 8 சதவீதம், 12 சதவீதம், 16 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 24 சதவீதம் என்றடிப்படையில் அதிகரிக்கும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு வருவாய் சட்டம் திருத்தப்படுவதற்கு முன்னர் ஆகக் கூடிய வருமான வரி 16 சதவீதமே இருந்தது. அவற்றுக்கு மேலதிகமாக வருடாந்த வருமானமாக ரூபாய் 25.5 மில்லியன் சம்பாதித்தவர்களுக்கு முன்னர் அறவிடப்பட்ட 12 சதவீத வட்டி 24 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. என்றாலும் மாதாந்த வருமானம் ரூபாய் 3 இலட்சத்துக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டும் வைத்தியர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட தொழில்சார்ந்தோருக்கும் இது விசேட தாக்கத்தை ஏற்படுத்தும்.

புதிய உள்நாட்டு வருவாய் சட்டத்தின் ஊடாக நேற்று முன்தினம் முதல் அமுலில் இருக்கும் பிரதான வரியாக, மூலதன வரியே இருக்கும் என்றும் நிதியமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

"யாராவது ஒருவர் தனக்கு உரித்துடைய, இரண்டாவது வீட்டை அல்லது காணியை விற்பனை செய்யும் போது வர்த்தக சந்தையில் இருக்கும் விற்பனை விலைக்கு மேலதிகமாக முதலீட்டு வருமானத்திலிருந்து 10 சதவீத வரி அறவிடப்படும்" என்றும் நிதியமைச்சு அறிவித்துள்ளது.

"வெளிநாடுகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள், இந்த நாட்டின் வங்கிகளில் வைப்புச் செய்கின்ற பணத்தில், கணக்கு மீதியின் அடிப்படையில் நூற்றுக்கு 5 சதவீதம் வரி அறிவிடப்படும்.

அதேபோல, வெளிநாடுகளில் வேலை செய்வோர் தங்களுடைய வீட்டுக்கு அல்லது உறவினர்களுக்கு அனுப்பப்படும் பணத்துக்கு எந்தவிதமான வரியும் அறவிடப்படமாட்டாது" என்றும் நிதியமைச்சு அறிவித்துள்ளது.

மூத்த குடிமக்களின் வைப்புகளுக்கான வரி வருமானத்தில் 15 இலட்சம் ரூபாய் வரைக்குமான வரி விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதுடன், மிகுதிக்கு 5 சதவீதம் வரி அறவிடப்படும். "வரி நிவாரணம் மற்றும் வரிமுறிவுகளுக்காக நிதியமைச்சருக்கு இருந்த 200 சந்தர்ப்பங்கள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளமை புதிய உள்நாட்டு வருவாய் சட்டத்தின் விசேட அம்சமாகும்" என்றும் நிதியமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்

## லண்டனில் போராட்டம்




(லண்டன்)

தாயகத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் பல்வேறு வகையான சட்டங்களின் மூலம் கைது செய்யப்பட்டு பல்லாண்டுகளாக சிறைகளில் வதைபட்டுக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய இலங்கை அரசிற்கு பிரித்தானிய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி லண்டனில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டம் தொடர்பாக அதன் ஊடக செயற்பாட்டாளரான யதுர்சன் சொர்ணலிங்கம் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் (01.04.2018) பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 4:30 மணிவரையும் பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற இப் போராட்டத்தில் நாடு கடந்த அரசினுடைய மனித உரிமைகளுக்கான அமைச்சர் மணிவண்ணன் பத்மநாபன், விளையாட்டு மற்றும் சமூக நலன் பிரதி அமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம், மன்ற உறுப்பினர்களான நிமலன் சீவரத்தினம், ஆறுமுகம் முருகதாஸ், செயற்பாட்டாளர்கள் மற்றும் லண்டன் வாழ் தமிழ் மக்கள் என நூற்றுக்கணக்கானோர் பங்கெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டமானது தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு, வடக்கு- கிழக்கு பகுதிகளில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் நில விடுவிப்பு போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானிய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-281)

# வீதி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலி!

(கொழும்பு)

தம்புள்ளை, கொழும்பு பிரதான வீதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கலேவெல, யட்டிகல்பொத்த பகுதியில் ஆட்டோ ஒன்றும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதிலேயே நான்கு பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சம்பவத்தில் உயிரிழந்த நால்வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் பெண் ஒருவரும், பெண் குழந்தை ஒன்றும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





# அடையாள அட்டையை காட்டுமாறு எம்.பியிடம் பொலிஸ் கேட்டது

## வெட்கம் கெட்ட செயல்


### எட்வட் காட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எட்வட் ஜெயசேகர தலைமையில் கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது பொலிஸ் அதிகாரியொருவர் தலையிட்டதனால் அப்பிரதேசத்தில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த எம்.பி. யிடம் திடீரென நுழைந்த பொலிஸ் அதிகாரி அடையாள அட்டையைக் காட்டும்படி வினவினார். நேற்று நடைபெற்ற நிகழ்வில் ஒலிபெருக்கியை பயன்படுத்த அனுமதி பெற்றுள்ளாரா எனத் தெரிந்துகொள்வதற்கே இவ்வாறு வினவியதாக குறித்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இருப்பினும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரிடம் அடையாள அட்டையைக் காட்டுமாறு பொலிஸ் அதிகாரியொருவர் கோரியமை வெட்கப்படக் கூடிய ஒரு செயல் என எட்வட் ஜெயசேகர விசனம் வெளியிட்டுள்ளார். (இ-7)



கேலிச்சித்திரம்

# மைத்திரியை மலை போல் நம்பும் மகிந்த

### இந்திய ஊடகம் தகவல்



(கொழும்பு)

பிரதமருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ஆதரவு வழங்குவார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை நாளை நான்காம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இது குறித்து இந்திய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆதரவு வழங்குவார் என நம்புகின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவைப் பெற்று தருவதன் மூலம் தீர்மானத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டியது அவர் தான்" என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தீர்வை நோக்கிய எமது பயணத்தில் பல்வேறு தடைகள், நெருக்கடிகள்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஒன்றிணைந்த நாட்டுக்குள் நிரந்தரத் தீர்வினை பெற்றுக்கொள்ள பல்வேறு முயற்சிகள் இந்த ஆட்சியில் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் பயணத்தில் பல்வேறு தடைகளையும் நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். தமிழ் மக்களின் நியாயமான தீர்வுகளை சிங்கள மக்கள் மத்தியில் சரியாக கொண்டு சேர்க்கும் முயற்சிகளை சிங்கள தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா நேற்று முன்தினம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஒரு பாரம்பரிய சரித்திரத்தை கொண்ட மக்கள். இலக்கியம், சங்கீதம், கலாசாரம், பாரம்பரியம் நிறைந்தும் சரித்திரத் தன்மை கொண்டதாயுமே தமிழர் வரலாறு காணப்படுகின்றது. ஆகவே இவ்விதமான நிகழ்வுகளை நடத்துவதன் மூலமாக தமிழர் பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது. எமது அடித்தளம் இதில் தான் தங்கியுள்ளது. அதனை எவரும் மறுக்க முடியாது. ஆகவே நாம் அனைவரும் இதனை பாதுகாக்க வேண்டும். ஆகவே நிகழ்வை நடத்தும் அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்க வேண்டும். மேலும் தமிழர் என்ற வகையில் எமக்கு தீர்வுகள் அவசியமாக உள்ளன. நான் விரும்பி அரசியலுக்கு வந்தவனல்ல. எனது தொழிலை நேசித்தேன்.

எனினும் அரசியலுக்கு வந்தவுடன் எனது தொழிலை நான் விட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு அரசியல்வாதியாக நாம் சில நகர்வுகளை கருத வேண்டும். நாடு சுதந்திரமடைய முன்பாகவே எமது பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைத்திருக்க வேண்டும். 1935ஆம் ஆண்டு இலங்கைக்கு டொனமூர் ஆணைக்குழு வந்தது.

அதன்போது டொனமூர் ஆணைக்குழு பிரேரணைகள் அடிப்படையில் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தால், முறைப்படி ஆட்சியமைக்கப்பட்டிருந்தால், சுயாட்சியில் இப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு அதுவும் நாடு சுதந்திரம் அடைய முன்னர் கிடைக்கப்பெற்றிருக்க வேண்டும். 1935 ஆம் ஆண்டு இந்திய சட்டத்தின் மூலமாக மாகாணங்கள் உருவாக்கப்பட்டு மாகாணங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

எனினும் அச் சந்தர்ப்பத்தை நாம் இழந்தோம். டொனமூர் ஆணைக்குழுவிற்கு முன்பு பூரண சுதந்திரம் வேண்டும் என கேட்டோம். தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சமஷ்டி வழங்கப்பட வேண்டும் என நாம் கேட்கவில்லை. பூரண சுயாட்சியையே கேட்டோம். கண்டிய சிங்களவர்கள் தங்களுக்கு சுயாட்சி வேண்டும் என கேட்டார்கள். ஆனால் அவர்களுக்கு ஆதரவாக நாம் இருக்கவில்லை. சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வந்தபோது நாம் 50க்கு 50 அதிகாரம் கேட்டோம். அது தவறானது என நான் கூறவில்லை. ஆனால் அது எந்தளவிற்கு யதார்த்தமானது என்பது கேள்விக்குரிய விடயமாகும். இவ்விதமான கோரிக்கைகள் மூலமாக நாடு சுதந்திரம் அடைய முன்னர் தீர்வுகள் கிடைக்கவிருந்த சந்தர்ப்பங்களை நாம் இழந்தோம். நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் எமது பிரச்சினைகளை தீர்ப்பது மிகவும் சிக்கலான விடயமாக இருந்தது. சாதாரணமான மாவட்ட சபைகளைக்கூட உருவாக்க முடியாத நிலைமையில் நாம் இருந்தோம்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் 1983ஆம் ஆண்டு இந்திரா காந்தி மற்றும் ராஜீவ்காந்தி ஆகியோரின் தலையீட்டின் காரணமாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு வடகிழக்கு இணைக்கப்பட்டு ஓரளவு சுயாட்சி உருவாக்கப்பட்டது. அது போதாது. அது ஒரு தீர்வு அல்ல. ஆனால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை பெற நாம் யதார்த்தமாக நடந்து கொள்ள வேண்டும். இந்த தீர்வை நாட்டில் வாழும் சகல மக்களும் குறிப்பாக பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் என அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்விதமான ஒரு தீர்வே ஏற்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் பிரச்சினையான விடயம் என்னவெனில் பலவிதமான தடைகள், பல எதிர்ப்புகள் எழுந்துள்ளன. எனினும் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஒருமித்த நாட்டுக்குள் ஒரு தீர்வை எதிர்பார்க்கின்றனர் என நாம் நினைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு உண்மைகளை தெளிவுபடுத்தி அனைவரது ஒத்துழைப்புடனும் ஒரு தீர்வை ஏற்படுத்த சிங்கள தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். அதன் மூலமாக ஒரு தீர்வு கிடைக்கப் பெற வேண்டும். அதுமட்டுமே எமக்குள்ள ஒரே வழி முறை. இன்று சர்வதேச சமூகத்தின் முழுமையான ஆதரவை பெற்றுள்ளோம்.

எமது கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை. அது அங்கீகரிக்கப்பட வேண்டிய, தகுதியான கோரிக்கை என்ற நிலைப்பாடு சர்வதேச சமூகத்திடம் உள்ளது. அந்த ஆதரவை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்காக தமது கிராமங்களுக்குப் பயணம் செய்யும் பொது மக்களின் நன்மை கருதி கடந்த வருடங்களைப் போன்று விசேட போக்குவரத்து சேவைகளை புகையிரதத் திணைக்களமும் இலங்கை போக்குவரத்து சபையும் ஒழுங்கு செய்துள்ளன.

இதற்கு மேலதிகமாக தனியார் பேருந்து சேவைகளும் இடம்பெறவுள்ளன.

விசேட புகையிரத சேவை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகி 17ஆம் திகதி வரை இடம்பெறும் என்று மேலதிக புகையிரத பொது முகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை, மாத்தறை, அநுராதபுரம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் வரை இந்த புகையிரத சேவைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை இலங்கை போக்குவரத்து சபையின் விசேட பேருந்து சேவைகள் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகும் என அதன் தலைவர் ரமல் சிறிவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# வெலிக்கடை துப்பாக்கிச்சூடு சந்தேக நபர் வெளிநாட்டில்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமை தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நபர், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரியாக கடமையாற்றியுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, குறித்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில், கடந்த வாரம் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா மற்றும் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

பாரதம்

# ஸ்டாலின் வீட்டிற்கு மர்மநபர் நள்ளிரவில் வெடிகுண்டு மிரட்டல்

(சென்னை)

சென்னையில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வீட்டிற்கு நள்ளிரவில் வெடிகுண்டு மிரட்டல் வந்ததையடுத்து அவரது வீட்டில் வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரமாக சோதனை நடத்தியுள்ளனர்.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் வீட்டிற்கு வெடிகுண்டு வைத்திருப்பதாக நேற்று முன்தினம் நள்ளிரவில் மிரட்டல் வந்தது. காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய மர்ம நபர். ஸ்டாலின் வீட்டின் மீது குண்டு வீசவுள்ளதாக தெரிவித்தார்.



இதையடுத்து நள்ளிரவில் மு.க.ஸ்டாலின் ஆழ்வார் பேட்டை வீடு மற்றும் கருணாநிதி கோபாலபுரம் வீடுகளில் பொலிஸார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரமாக சோதனை செய்தனர். வீட்டைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டது.

வீடு முழுவதும் சோதனையிட்டதில் சந்தேகப்படும்படியான எந்த பொருளும் கிடைக்கவில்லை. அப்பகுதியில் சந்தேகப்படும்படியான நபர்களும் சிக்கவில்லை. எனவே, வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரியவந்தது.

வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். காஞ்சிபுரத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (10)

# நேருக்கு நேர் மோ 15 தொழிலாளர்

(குவைத்)

குவைத் நாட்டில் உள்ள எண்ணெய்க்கிணறு நிறுவனத்துக்கு சொந்தமான பேருந்து எதிர்திசையில் வந்த பேருந்து மீது நேற்று முன்தினம் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.



குவைத் நாட்டில் அரசுக்கு சொந்தமான பெற்றோலிய கிணறுகளில் தனியார் நிறுவத்தை சேர்ந்தவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து கச்சாய் எண்ணெய்உற்பத்திதொழிலை செய்து வருகின்றனர்.


புர்கான் டிரில்லிங் என்ற நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாள

# மேலாண்மை வாரியம் அமைக்காவிட்டால் நாடாளுமன்றத்தை முடக்குவோம்

## அன்வர்ராஜா எச்சரிக்கை

(இராமநாதபுரம்)

அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காவிட்டால் நாடாளுமன்றத்தை முடக்குவோம் என அன்வர்ராஜா எம்.பி எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இராமநாதபுரத்தில் அன்வர்ராஜா எம்.பி. ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், காவிரி மேலாண்மை வாரியம் விவகாரத்தில் அ.தி. மு.க.எம்.பி.க்கள் 37 பேர் இராஜினாமா என்ற பேச்சுக்கே இடமில்லை. எம்.பி.க் கள் இராஜினாமா என்பது அ.தி.மு.க. கொள்கை முடிவு. நாங்கள் எதுவும் செய்ய இயலாது. நாங்கள் இராஜினாமா செய்து விட்டால் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப எவருமில்லை.

இந்தியாவில் சிந்து, கங்கை நதி நீர் சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு எவ்வித சர்ச்சையுமின்றி பகிர்ந்து அளிக்கப்படுகிறது. காவிரி நீர் விவகாரம் என்பது அரசியலில் பிரதானமாக உள்ளது. கர்நாடக அரசியலில் காங்கிரஸ், பா.ஜ.க. சம போராட்டத்தில் உள்ளன. உச்சநீதிமன்ற உத்தரவை அமுல்படுத்துவதில் கர்நாடகா அரசு முரண்படுகிறது. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும்என்ற நிலைப்பாட்டை மறைந்த முதல்வர் ஜெயலலிதா அரசாணை வெளியிட்டு நீதிமன்ற வழக்கு தொடர்ந்துதான் நிறைவேற்ற முடிந்தது.

ரூபாய் 86 இலட்சம் கோடி மத்திய வரவு-செலவுத்திட்டத்தில் எவ்வித விவாதமும் இன்றி முடிந்துள்ளது. அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதில் அ.தி.மு.கவின் உயிர் துடிப்பான போராட்டம் தொய்வின்றி தொடரும். அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்காவிட்டால் நாடாளுமன்றத்தை முடக்குவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# தென்கொரியர்களி மெய்மறந்து ரசி





(பியாங்யாங்)

வடகொரிய ஜனாதிபதியாக கிம் யாங் உன் பதவியேற்று 10 ஆண்டுக்கு பிறகு முதன் முறையாக தென்கொரிய பொப் இசை நிகழ்ச்சியை கண்டு மகிழ்ந்தார்.

அணு ஆயுத பிரச்சினை, ஏவுகணைகள் சோதனை காரணமாக வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே பிரச்சினை இருந்து வருகிறது. தென்கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது. இதனால் கொரிய தீப கற்பகத்தில்

# நியூட்ரினோ திட்டத்தை எதிர்த்து தீக்குளிப்பு

## ம.தி.மு.க. நிர்வாகி உயிரிழப்பு



(மதுரை)

மதுரையில் நியூட்ரினோ எதிர்ப்புக் கூட்டத்தில் தீக்குளித்த ம.தி.மு.க. நிர்வாகி ரவி நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தேனி மாவட்டம், போடி அருகே உள்ள பொட்டிபுரம் மலைப்பகுதியில் நியூட்ரினோ ஆய்வு மையம் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மதுரையில் கடந்த 31 ஆம் திகதி நடைப்பயணம் தொடங்கினார்.

அவரது பயணத்தை தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார். அப்போது, வைகோ விழிப்புணர்வு நடைப்பயணம் ஆரம்பித்த மேடையின் அருகே விருதுநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரவி (வயது-50) நியூட்ரினோ திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மண்ணெண்ணெய் ஊற்றி உடலில் தீ வைத்துக் கொண்டார்.


சுற்றி நின்றவர்கள் தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த வைகோ மற்றும் ம.தி.மு.க. தொண்டர்கள், ரவியை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அவரது உடல் முழுவதும்பலத்த தீக்காயம்ஏற்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தால் உணர்ச்சி பொங்க காணப்பட்ட வைகோ, தமது தொண்டர்கள் யாரும் தீக்குளிக்க வேண்டாம் என நிகழ்வு மேடையில் கண்ணீர்மல்க கேட்டுக்கொண்டார். 99 சதவீத காயங்களுடன் அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ரவி நேற்று உயிரிழந்தார்.

அவரது உயிரிழப்பை மருத்துவர்கள் உறுதி செய்தனர். இது ம.தி.மு.கவினர் மற்றும் மக்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (10)




# மோதிய பேருந்து ...ார்கள் உயிரிழப்பு



...ர்களை நேற்று முன்தினம் ஏற்றிச் சென்ற பேருந்து எதிர்த்திசை யில் வந்த பேருந்தின் மீது நேருக்கு நேர் மோதியது.

இந்த விபத்தில் 7 இந்தியர்கள், எகிப்து நாட்டை சேர்ந்த 5 பேர், பாகிஸ்தானை சேர்ந்த 3 பேர் என மொத்தம் 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்த இரு இந்தியர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (10)

# சிரியாவில் அமைதிப்பூ மலர வேண்டும் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தல்

(வாடிகன்)

'சிரியாவில் படுகொலைகளை தடுத்து அமைதி பூக்களை மலர வைக்க வேண்டும்' என்று போப் பிரான்சிஸ் தனது ஈஸ்டர் செய்தியில் வலியுறுத்தியுள்ளார். ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு இத்தாலியின் வாடிகன் நகரிலுள்ள புகழ்மிக்க செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் போப் பிரான்சிஸ் தலைமையில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டவர்களுக்கு போப் ஆசி வழங்கினார். பின்னர் அவர் ஆற்றிய உரையில்,



உலகம் முழுவதும் சமாதானப் பூக்கள் பூக்க வேண்டும் என மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். இந்த சமாதானப் பூக்கள் முதலில் சிரியாவில் இருந்து மலரட்டும். இதற்காக உலகம் முழுவதையும் சேர்ந்த அரசியல், இராணுவ தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். சில நாடுகளில் நடத்தப்படும் படுகொலைகளுக்கு நீதி தீர்வு எட்டப்பட வேண்டும்.

கொரிய தீபகற்பத்திலும் அமைதி பேச்சுக்கான முயற்சிகள் நடக்கின்றன. கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், இந்த அமைதி பேச்சு வார்த்தையை மலர வைத்துள்ளன. இதன்மூலம், அங்கும் அமைதி மலர்வை மலர பிரார்த்தித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# ...களின் பொப் இசை நிகழ்வை ரசித்தார் கிம் யாங் உன்



போர் பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில் தென்கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற்றது. அதை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் தணிந்தது. தென்கொரிய அதிகாரிகள் வடகொரியா சென்று ஜனாதிபதி கிம் யாங் உன்னை சந்தித்தனர். அதன் எதிரொலியாக இரு நாடுகளுக்கு இடையே உறவு மலரத் தொடங்கியுள்ளது.

அண்மையில் தென்கொரியாவின் பொப் இசைக் கலைக் குழுவினர் 120 பேர் வடகொரியா சென்றுள்ளனர். அங்கு பல்வேறு நகரங்களில் இசை நிகழ்ச்சி நடத்துகின்றனர். நேற்று முன்தினம் தலைநகர் பியாங்யாங்கில் இசை நிகழ்ச்சி நடந்தது.

அதில் வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன் தனது மனைவியுடன் சென்று கண்டு ரசித்தார். அப்போது இசை மற்றும் நடன நிகழ்ச்சியை பார்த்து இருவரும் கை தட்டி மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சி முடிந்ததும் கிம் யாங் உன் தென்கொரிய கலைஞர்களை நேரில் சந்தித்து பாராட்டினார். கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார். நல்லெண்ண அடிப்படையில் வடகொரிய கலைஞர்கள் தென்கொரிய தலைநகர் சியோல் சென்று நிகழ்ச்சிகள் நடத்தவுள்ளனர்.

வடகொரிய ஜனாதிபதி தீடீர் மாற்றம் சர்வதேச நாடுகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (10)

# தீ விபத்தால் மன அழுத்தம்; கெம்ரோவா ஆளுநர் இராஜினாமா

(மொஸ்கோ)

ரஷ்ய வணிக வளாகத்தில் தீ விபத்தில் 64 பேர் பலியானதை தொடர்ந்து கெம்ரோவோ ஆளுநர் இராஜினாமா செய்தார்.

ரஷ்யாவின் சைபீரியா மாகாணத்திலுள்ளது கெம்ரோவோ நகரம். இங்குள்ள வின்ட்டர் செர்ரிமால் வணிக வளாகத்தில் கடந்த 25 ஆம் திகதி வணிக வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 64 பேர் உயிரிழந்தனர்.



வணிக வளாக நிர்வாகத்தினரின் மிக மோசமான குற்றவியல் சார்ந்த மெத்தனப்போக்கால் (criminal negligence) இந்த கோர விபத்து நிகழ்ந்ததாக புடின் வருத்தம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துக்கு காரணமானவர்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ள அவர், 64 உயிர்கள் பலியானதற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மார்ச் 28 ஆம் திகதி நாடு முழுவதும் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்குமாறு புடின் கேட்டுக் கொண்டார்.

இந்த தீவிபத்து நிகழ்ந்த வணிக வளாகத்தில் பாதுகாப்பு நடைமுறைகள் சரியாக கடைப்பிடிக்கப்படவில்லை என்பது விசாரணையில் தெரியவந்தது.

அந்த வணிக வளாகத்தின் தலைமை அதிகாரியை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், சுமார் 20 ஆண்டுகளாக கெம்ரோவோ பகுதி ஆளுநராக பதவியேற்றிருந்த அமான் டுலேயேவ் தனது பதவியை நேற்று முன்தினம் இராஜினாமா செய்தார்.

வணிக வளாகத்தில் தீ விபத்தில் பல உயிர்கள் பறிபோன பின்னர் இத்தனை கனமான மன அழுத்தத்துடன் ஆளுநராக என்னால் பணியாற்ற முடியாது.

எனவே, எனது பதவியை நான் இராஜினாமாச் செய்துவிட்டேன்.

எனது இராஜினாமாவை ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஏற்றுக்கொண்டுள்ளார் என அமான் டுலேயேவ் தெரிவித்துள்ளார். (10)

# அமெ. இறக்குமதிப் பொருட்களுக்கு சீனாவில் 25வீதம் சுங்கவரி அறவீடு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சுங்கவரித் தீர்மானத்துக்குப் பதிலடியாக, சீனாவும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சுங்கவரி விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பன்றி இறைச்சி, வைன் உட்பட 128 பொருட்களுக்கு 25 சதவீத சுங்கவரியை அறவிடவுள்ளதாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சீனா அறிவித்துள்ளது.

அமெரிக்கா மீதான சீனாவின் சுங்கவரித் தீர்மானம் நேற்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் 3 பில்லியன் டொலர் பெறுமதியான இறக்குமதிப் பொருட்களைப் பாதிக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பினால் ஏற்படும் இழப்பீடுகளைச் சீர்செய்யும் நோக்கிலும் சீனாவின் நலன்களையும் சமநிலையையும் பாதுகாக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கையை தாம் எடுத்துள்ளதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த மார்ச்சில் வெளிநாட்டு உருக்கு மற்றும் அலுமினியப் பொருட்களுக்கு சுங்கவரி அறவிடும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். இதற்குப் பதிலடியாக சீனாவும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பைத் தொடர்ந்து வர்த்தகப்போரை தாம் விரும்பவில்லை. எனினும், தமது பொருளாதாரம் பாதிக்கப்படுமெனில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சீனா ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 116க்கு மேல் ஆதரவு கிடைக்கும்


## கூட்டு எதிரணி உறுப்பினர் சொய்சா நம்பிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அரசாங்கம் மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 116 உறுப்பினர்களுக்கு அதிகமானோர் ஆதரவு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளனர் எனத் தெரிவித்த ஒன்றிணைந்த எதிரணியின் ரஞ்சித் சொய்சா எம்.பி. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிக் கொள்வோம் என்றார்.

புஞ்சி பொறளையில் உள்ள வஜிராராமை விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பிரதமருக்கு எதி



ரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதற்கு ஆளுங்கட்சி, ஜே.வி.பி, ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்கள் உள்ளனர்" என்றார்.

"எனவே, நாளை 4 ஆம் திகதியன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அத்துடன், பிரதமருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் எதிர்ப்புகள் உருவாகியுள்ளன" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரஜைகளுக்கு காணி உரிமையைப் பெற்றுக் கொடுக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது- சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் பிரஜைகளுக்கு காணி உரிமையை வழங்குவதற்காக தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

குருநாகல் - கொட்ட வெஹெர பிரதேசத்தில் யொவுன் செத்கம மாதிரிக் கிராமத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் அமைச்சர் உரையாற்றினார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காணி உரிமை, ஒரு மனித உரிமையாகும். இது நாட்டில் அமைக்கப்படும் 605 ஆவது எழுச்சிக் கிராமமாகும்.

இது 25 வீடுகளைக் கொண்ட கிராமமாகும். தற்போதைய அரசாங்கம் மக்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (இ-7)

## நம்பிக்கை இருக்கிறது ஆனால் இல்லை

# ரணில் மீதான பிரேரணை வாக்கெடுப்பின் பின் அமைச்சர் பதவியைத் துறக்க திகாம்பரம் முடிவு

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீதான வாக்கெடுப்பின் போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த அறுவரும் தீர்மானித்துள்ளனரென செய்தி வெளியாகியுள்ளது.

இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும், அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியைச் சேர்ந்த கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் அமைச்சருமான பி.திகாம்பரம் தலைமையின் கீழ் செயற்படும் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான எம்.திலகராஜ் ஆகியோரே பிரதமருக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கப்பட்டதன் பின்னர், அமைச்சர் பதவியிலிருந்து தான் இராஜி



னாமாச் செய்துகொள்ளப்போவதாக அமைச்சர் திகாம்பரம் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளாரென அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலர், தனக்கெதிராக பல்வேறான பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். அதுவே தன்னுடைய இராஜினாமாவுக்கு காரணமென அமைச்சர் பி.திகாம்பரம் தெரிவித்துள்ளாரென அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பில், நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜை தொடர்பு கொண்டு கேட்டபோது, "எங்களுடைய கூட்டணியின் கருத்து, தங்களது தேவைக் கேற்ப திரிபுபடுத்தப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின்மீது எங்களுடைய கூட்டணிக்கு நம்பிக்கையிருக்கிறது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் மீது நம்பிக்கையில்லை" எனத் தெரிவித்தார். (இ-7)

## தலைவருக்கு எதிரான பிரேரணையை ஆதரித்தால்

# கட்சியிலிருந்து நீக்கப்படுவது உறுதி; ஐ.தே.க.உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

பிரதமருக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார். நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து ஜனாதிபதியுடன் வெற்றிகரமான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரியை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே உதவியது. இந் நிலையில், ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் சிறந்த உறவு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தை விரும்பும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எந்தவொருவரும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கமாட்டார்கள்.

இந்நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற தெளிவான முடிவில் ஐக்கிய தேசியக் கட்சி பினர் இருக்கின்றனர். இதனால் எமது கட்சியினர் வேறு விதமாக செயற்படமாட்டார்கள்.

எவ்வாறாயினும், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்" என அவர் எச்சரித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சாக்குப் போக்குச் சொல்கிறபோது...

சாக்குப் போக்குச் சொல்வதற்கு என்று பரிசு உண்டு என்றால் அதில் நோபல் பரிசு வாங்குவதில் கூட நம்மவர்களுக்கு ஒரு சிரமும் இருக்காது.

"ஏன் லேட்"

''லேட்டாயிடுச்சு சேர்'' லேட்டாயிடுச்சு என்பது எப்படி சரியான பதிலாக இருக்க முடியும்? தவறுதான். லேட்டாக்கி விட்டேன் என்பதுதானே சரியான பதில்!

"கல்யாணத்திற்கு ஏன் வரவில்லை?"

"ஒரே வேலை! நகர முடியலை" (தூங்கி வழிவது ஒரு பெரிய வேலையா என்ன?)

ஏன் அந்த வேலையைச் செய்து முடிக்கவில்லை?

அது ரொம்பக் கஷ்டம் சேர். சொன்னா உங்களுக்குப் புரியாது சேர். இப்படிப் பதில் சொல்பவர் நாம் செய்வது தவறு. அதனால் நமக்குத் தான் நட்டம் என்பதை உணருவதில்லை.

"வேலை விடயமாக அவரை ஏன் போய்ப் பார்க்கலை?"

" நேரமில்லை சேர்!" (நேரமில்லையா மனமில்லையா?)

நாம் வளர வேண்டுமானால் முதலில் சாக்குப் போக்குச் சொல்வதை நிறுத்த வேண்டும்.

ஒன்றைத் தட்டிக் கழிப்பதற்கு நாம் 999 சாக்குப் போக்குகளைச் சொல்ல முடியும். ஆனால் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு ஒரு காரணம் தான் வேண்டும். அது சாக்குப் போக்குச் சொல்வதை நிறுத்துவது. இப் பழக்கத்தை ஒரே நாளில் நிறுத்திவிட முடியாது.

மெல்ல அதை நிறுத்தவும் குறைத்துக் கொள்ளவும் முயன்றால் முடியும். அதற்கான சில வழிமுறைகளைப் பார்ப்போம்.

சாக்குப் போக்குச் சொல்லி மற்றவர்களைச் சமாதானப்படுத்தி விட்டதாக நினைத்துக் கொள்கிறோம் அல்லவா? அதில் எந்த அளவுக்கு நாம் வெற்றி பெற்றோம் என்பதைப் பற்றி நாம் அலசிப் பார்க்க வேண்டும்.


எவ்வளவு காரணம் (சாக்குப் போக்கு) சொல்லியும் ஒருவர் சமாதானம் ஆகவில்லை என்றால் நிச்சயம் நம்மீது தான் கோளாறு என்று பொருள்.

மற்றவர்கள் சமாதானம் ஆனார்களா, இல்லையா? என்று பொதுவாக நாம் கவலைப்படுவதில்லையல்லவா? இனி நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். மற்றவர்களை எப்படியும் சமாதானம் செய்துவிட வேண்டும் என்பதில் குறிப்பாக இருக்க வேண்டும். இந்தப் பழக்கம் நாம் சாக்குப் போக்குச் சொல்லும் குணத்தை மாற்றிவிடும். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படாததால் தான் நம்மிடம் இக்குறை தொடர்கிறது.


இரண்டாவதாக மற்றவர்கள் சமாதானம் ஆகிவிடுகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். நாம் சொன்ன சாக்குப் போக்குகள் உண்மைத்தன்மை உடையனவா என்று நாம் அக்கறைப்பட வேண்டும். இந்த அக்கறையும் சிந்தனையும் நம்மை மாற்றும்.

சாக்குப் போக்குச் சொல்லி மற்றவர்களைச் சமாதானப்படுத்தி விடுவது என்பது சாமர்த்தியமே அல்ல. மாறாக அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயலே தவிர, வேறு அல்ல!

**லேனா தமிழ்வாணன்**



# சம்பந்தன் இருக்கும் வரையில் ரணிலை அசைக்க முடியாது!



## குணதாச அமரசேகர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவு இருக்கும் வரையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தேசிய அரசியலில் இருந்து அசைக்க முடியாது என தெரிவித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் மகிந்த ராஜபக்ஷ படுதோல்வியினை எதிர் கொள்வார் எனவும் தெரிவித்துள்ளது.



இது குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஒரு போதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக செயற்படமாட்டார். நாட்டு நன்மை கருதாது தமது சுய நல கொள்கைகளை மாத்திரம் நிறைவேற்றிக்கொள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிராகவும், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாகவும் தமது தீர்மானத்தினை வெளிப்படுத்தும் என தெரிவித்தார். (இ-7)

## இளைஞர், யுவதிகளின் ஒற்றுமையை பாதுகாக்க வேண்டும்-பிரதமர்

(கொழும்பு)

இளைஞர், யுவதிகளின் ஒற்றுமையை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதனை பிளவுபடுத்தவோ இல்லாமல் செய்யவோ யாருக்கும் இடமளிக்கக்கூடாது.

இன ஐக்கியத்தை பாதிக்கும் கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்யும் வழிகளை இல்லாமலாக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருநாகல் நிகவரெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற யொவுன்புர நிகழ்ச்சியின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். யொவுன்புர நிகழ்வுக்கு பல இன, மதங்களைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் இங்கு குழுமியிருக்கின்றனர். எந்த மதத்தை, இனத்தை சேர்ந்தவர்களானாலும் நீங்கள் அனைவரும் இந்த இடத்துக்கு வந்திருப்பது அனைவரும் ஒன்றிணைந்து ஐக்கியப்பட்டு அந்த ஐக்கியத்துடன் மீண்டும் திரும்பிச் செல்வதற்காகும்.

மேலும் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து யொவுன்புர நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் இளைஞர், யுவதிகளுடனான ஒற்றுமையை நாங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதனை பிளவுபடுத்தவோ இல்லாமல் ஆக்குவதற்கோ யாருக்கும் இடமளிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நேபாள பிரஜையின் உடலிலிருந்து 90 ஹெரோயின் வில்லைகள் மீட்பு

(கொழும்பு)


கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நேபாள நாட்டவரின் உடலினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 90 ஹெரோயின் வில்லைகள் மீட்கப் பட்டுள்ளன.

டுபாயில் இருந்து வந்த சந்தேகநபர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளினால் கடந்த 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவர் மாத்திரைகளை விழுங்கியிருப்பது தெரிய வந்துள்ளதுடன், அதனையடுத்து சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மீட்கப்பட்ட ஹெரோயின் வில்லைகளின் பெறுமதி சுமார் 90 இலட்சம் ரூபா பெறுமதியானது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

## வாகனப் பந்தயங்களால் பொலிஸாருக்கு தலைவலி



(கொழும்பு)

செல்வந்த வர்த்தகர்களின் பிள்ளைகள் கொழும்பின் பிரதான வீதிகளில் வார இறுதியின் இரவு வேளைகளில், மோட்டார் சைக்கிள் மற்றும் கார்ப் பந்தயங்களில் ஈடுபடுகின்றமையால், அது தமக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்துவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கருவாத் தோட்டப் பகுதிகளிலேயே இவ்வாறு வாகனப் பந்தயங்கள் அதிகம் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வாகன பந்தயங்களில் ஈடுபட்டுவந்த, பெறுமதிமிக்க 10 கார்களையும், 80 இலட்ச ரூபாய் பெறுமதியான பந்தயத்திற்கு பயன்படும் மோட்டார் சைக்கிள்களும் கருவா தோட்டப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட வாகனங்களுள் சில, இலங்கைக்கு சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-7)

## உதயங்கவை நாடு கடத்த இலங்கை கோரிக்கை



(கொழும்பு)

ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகளால் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை இலங்கையிடம் கையளிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸார் வெளிவிவகார அமைச்சினூடாக இக் கோரிக்கையை ஐக்கிய அரபு அமீரக பொலிஸாரிடம் முன்வைத்துள்ளதாகவும் அதில் உதயங்கவை இலங்கைக்கு நாடு கடத்தக் கோரியுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

டுபாய் விமான நிலையத்தில் வைத்து வெளிநாடொன்றுக்குச் செல்லும் நோக்குடன் வந்த உதயங்க வீரதுங்கவை அந்நாட்டு பாதுகாப்புத் தரப்பு கைது செய்து அபுதாபிக்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் இந்நிலையிலேயே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி டுபாயில் கைதான உதயங்கவை அந்நாட்டு நீதிமன்றில் ஆஜர் செய்து அதில் கிடைக்கப்பெறும் தீர்மானத்துக்கமையவே இலங்கைக்கு அவரை நாடு கடத்துவதா? இல்லையா? என்ற இறுதித் தீர்மானத்துக்கு அந்நாட்டு அதிகாரிகள் வருவர் என ஐக்கிய அரபு அமீரக தகவல்களை மேற்கோள் காட்டி உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தகவல் தெரிவித்தார்.

இந் நிலையில் உதயங்க வீரதுங்கவை எப்படியேனும் இலங்கைக்கு அழைத்து வந்து இங்கு அவருக்கெதிராகவுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்யவுள்ளதாகவும் இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

மிக்-27 ரக விமான கொள்வனவின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் 14 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபராக கருதி தேடப்பட்டு வரும் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க டுபாயில் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முதன்முறையாக கைது செய்யப்பட்ட நிலையில் அவரை இலங்கைக்கு அழைத்து வர பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி இரு சிறப்புக் குழுக்கள் டுபாய் சென்றன. மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்கார உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழுவினரே இவ்வாறு அவரை இலங்கைக்கு அழைத்துவரும் முயற்சியாக டுபாய் சென்றனர். எனினும் பெப்ரவரி 8 ஆம் திகதி டுபாய் அதிகாரிகள் உதயங்கவை விடுதலை செய்ததுடன் அழைத்து வரச் சென்ற குழுவும் வெறுங்கையுடன் நாடு திரும்பியது.

பின்னர் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட மற்றும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.கே.டி.பிரியந்த உள்ளிட்ட சிறப்புக்குழுவொன்றும் மீளவும் உதயங்கவை இலங்கைக்கு அழைத்துவரும் முயற்சியாக டுபாய் சென்றது. எனினும் அம்முயற்சியும் கைகூடவில்லை. இந் நிலையிலேயே கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி உதயங்க வீரதுங்க டுபாய் விமான நிலையத்தில் வைத்து மீளவும் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நல்லாட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிங்கப்பூரில் மகேந்திரனுடன் சந்திப்பு

(கொழும்பு)

பிணைமுறி மோசடி வழக்கில் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள முக்கிய குற்றவாளியான அர்ஜுன் மகேந்திரனை நல்லாட்சி அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மூவர் சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சிங்கப்பூர் ஊடாக வெளிநாட்டுப் பயணங்களை முன்னெடுத்திருந்த போதே இச் சந்திப்பு இடம் பெற்றிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





குறித்த மூன்று சிரேஷ்ட உறுப்பினர்களில் அமைச்சரொருவர் இரண்டு நாட்கள் சிங்கப்பூரில் தங்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கியில் இடம்பெற்ற முறிகள் மோசடி தொடர்பில் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் பிடியாணை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இறுதித் தீர்மானம் ஒகஸ்டில்; ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகிறார் கோத்தா?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவது தொடர்பான அறிவிப்பை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக் ஷ எதிர்வரும் ஒகஸ்ட் மாதமளவில் வெளியிடவுள்ளதாக நம்பகரமாக தெரியவருகின்றது. இதற்கேற்ற நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார். தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் பலரிடம் இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தூது



அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனித்தனியாக சந்தித்து கலந்துரையாட விரும்புவதாக கோத்தபாய ராஜபக்ஷவின் சார்பில் சில தலைவர்களுக்கு தூது அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் தூய்மையான நாட்டினை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே அந்தப் பணியினை தன்னால் முன்னெடுக்க முடியுமென்றும் அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க முன்வருமாறும் கோத்தபாய ராஜபக்ஷ கோருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில் விரைவில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களை அவர் சந்தித்து பேசலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

## மதுர விதானகே மேயராகத் தெரிவு

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையின் புதிய மேயராக மதுர விதானகே தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மதுர விதான கேவுக்கு ஆதரவாக 23 வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

புதிய மேயர் தெரிவுக்காக ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிட்ட சந்திம நயனஜித்துக்கு 11 வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன . பெரமுனவின் பிரேமலால் அதுகோரள பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். (இ-7)

# பல வருடங்களாக தவறான அரசியல்

## குமார் குணரட்னம் விசனம்


(கொழும்பு)

மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைக்குப் காரணம் பல வருடங்களாக இடம்பெறும் தவறான அரசியல் முறைமையே என முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் குமார் குணரட்னம் பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மத்திய வங்கியில் இடம்பெற்ற முறி மோசடி மற்றும்



பிரதமர் மீது நம்பிக்கை இன்மை என்பனவும் முன்வைக்கப்படுகின்றன.

இது மக்களுக்கு பாதிப்பாக இருந்தாலும், பிரதான காரணம் பலவருடங்களுக்கு முன்பிருந்து இடம்பெற்று வரும் தவறான அரசியல் கலாசாரமே என குமார் குணரட்னம் சுட்டிக்காட்டினார். (இ-7)

# அக்கிராசன விவகாரமும் சூடுபிடிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

சபையில் உள்ள அக்கிராசன விவகாரமும் நாளை புதன்கிழமை சூடுபிடிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன வென தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, அக்கிராசனத்துக்கு வருகைதந்தால் சபையிலிருந்து வெளிநடப்பு செய்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் தீர்மானித்துள்ளனர் என அந்தத் தகவல் தெரிவித்துள்ளது.

பிரதி சபாநாயகர் பதவிக்கு தகுதியில்லாத செயற்பாடுகளில் ஈடுபட்ட திலங்க சுமதிபாலவுக்கு நாளை 4 ஆம் திகதியன்று சபையை வழிநடத்துவதற்கான அனுமதியை வழங்கக்கூடாது. அவ்வாறு வழங்கினால் அது பக்கச்சார்பாகிவிடும் என்றும் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"இந்த விவகாரம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது, சபாநாயகர் கரு ஜெயசூரியவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாக தெரிவித்துள்ள சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல அவதானம் செலுத்துவதாக சபாநாயகர் கருஜெயசூரிய தன்னிடம் தெரிவித்துள்ளார்" என அவர் மேலும் கூறினார். (இ-7)

# ஒடிசா லிங்கராஜ ஆலயத்திற்குள் அமைச்சர் காமினி நுழையத்தடை

## மாநிலம் சார்பில் மன்னிப்புக் கோரல்

(டில்லி)

பௌத்த சாசன அமைச்சரான காமினி ஜெயவிக்கிரம பெரேரா, இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற லிங்கராஜ ஆலயத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம், காமினி ஜெயவிக்கிரம பெரேரா இந்தியா சென்றிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காமினி ஜெயவிக்கிரம பெரேரா இந்து அல்ல என்பதாலேயே அவர் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. தாம் ஒரு பக்தியுள்ள பௌத்தர் என்று அவர் கூறிய போதிலும், ஆலய நிர்வாகிகள் அவரை அனுமதிக்கவில்லை.

புவனேஸ்வரில் உள்ள கலிங்க அனைத்துலக நிறுவகத்தில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றிய காமினி ஜெயவிக்கிரம பெரேரா தனக்கு ஏற்பட்ட இந்த அனுபவம் குறித்து தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, கலிங்க அனைத்துலக நிறுவகத்தின் நிறுவக தலைவரான முன்னாள் இந்திய வெளிவிவகாரச் செயலர் லலித் மான் சிங், இந்தச் சம்பவத்துக்காக தமது மாநிலத்தின் சார்பில் மன்னிப்புக் கோரினார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 12

பரமசாமி பஞ்சாட்சரம்

சிவபெருமான் சோதி வடிவமாய் நின்று யார் இச்சோதியின் அடியையோ அல்லது முடியையோ முதற் காண்கிறார்களோ அவரே பெரியவர் என்று தீர்மானிக்கலாம் என அசரீரியாகக் கூறினார். அதன் பிரகாரம் பிரம்மா அன்ன வடிவம் எடுத்து முடியையும் விஷ்ணு வராக உருவம் எடுத்து அடியையும் காணப் புறப்பட்டுக் காண முடியாமற் களைப்புற்றுத் தங்கள் சக்தியை இழந்து நின்றார்கள்.

விஷ்ணு தனது பிழையை உணர்ந்து இழந்த பதவியை மீளப் பெறுவதற்காகப் பல வருடங்கள் கயிலையில் தீர்த்தபுரி என்னும் இடத்திலே தவம் இருந்தார். விஷ்ணு செய்த தவத்தால் மகிழ்ந்த சிவன் காட்சியளித்து , அவர் கேட்ட இழந்த பதவிகளைக் கொடுத்தார். அத்துடன் சிவபெருமான் அவருக்கு " எத்தகைய நபரையும் மயக்கும் சக்தியையும்" வழங்கினார். இதனால் விஷ்ணு "மாயம்" எனும் பெயரைப் பெற்றார். அது மட்டுமா?

சிவன் தன் மேனியில் இடப்பாகத்தை திருமாலுக்கு அளித்து, "அரியும் சிவனும் ஒன்றே" என்று சொல்லும் விதமாகக் காட்சி அளித்தார். விஷ்ணு தவம் இருந்த இடத்தில் அதாவது இராவணன் அமைத்த ஏரிக்கு வடக்கே இருக்கும் தீர்த்தபுரியிலுள்ள வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையில் விஷ்ணு பக்தர்களை அதிகமாக காணலாம்.

### இராவணனின் தவம்

இராவணன் கயிலையில் மூன்று முறைகளாக தவம் இருந்து மூன்று தரமும் சிவபெருமானிடம் இருந்து வரங்களைப் பெற்றவர். இவர் தவம் இருந்த இடம், அவர் அமைத்த ஏரியின் தென் பகுதியாகும்.

மகா சிவபக்தனான இராவணன் முதன் முறை புலத்தியதின் அறிவுரையின் படி கயிலை வந்து தனது ஏரியிற் தனக்குப் பாதுகாப்பான ஒரு இடத்தில் ஒற்றைக்காலில் நின்று சில வருடங்கள் தவம் செய்தார் என்று புராணங்கள் கூறு கின்றன. ஆனால் திபெத்திய புராணத்தின்படி தனது ஏரியில் இராவணன் பத்து நாட்கள் மட்டுமே தவம் இருந்ததாகவும் பத்தாம் நாள் சிவபெருமான் இராவணன் முன்னே தோன்றி வரம் அருளினார் என்றும் தெரிய வருகின்றது.

இராவணன் செய்த தவத்தால் மகிழ்ந்த சிவன் காட்சி கொடுத்தார். சிவபெருமானைக் கண்டதும் இராவணன் ஆனந்தப் பரவசத்தில் " பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் என் பரிபூராணந்தமே!, ஆதியும் நீயே!, அந்தமும் நீயே!, பரம்பொருளே!, பரமேஸ்வரா! வெள்ளிமலைவாசா!, உன் திருப்பாதங்களே சரணம்" என்று வணங்கித் துதித்தார், அப்போது சிவபெருமான் " இலங்கேசா! உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள்?" என்று திருவாய் மலர்ந்தார். அதற்கு இலங்கேசன் " நான் என்றும் தங்களை மறவாதிருக்க வரம் தர வேண்டும்" என்றார். சிவபெருமான் " அந்த வரத்தை உனக்குத் தந்தோம். வேறென்ன வேண்டும். கேட்பாயாக!" என்றதும் இலங்கேசன் , " பக்தியோடு என்றென்றும் உன்னருகில் இருக்க அருள் வேண்டும்" என்று விண்ணப்பிக்க , சிவபெருமான் " நீ காட்டும் அன்புக்கு மகிழ்ந்தேன், வேறென்ன வேண்டும் கேள்?" என்று திருவாய் மலர்ந்தார்.



இலங்கேசனும் மிகவும் மகிழ்ந்து " முக்கோடி வாழ் நாளும், தேவர்களாலோ, அசுரர்களாலோ, மிருகங்களாலோ வெல்ல முடியாத வலிமையையும் , ஈரேழு உலகங்களையும் ஆட்சி செய்யும் வரத்தையும் அருள வேண்டும்" என்று பணிந்து வேண்டினார்.

(தொடரும்)

# சகல வாக்குறுதிகளும் மூன்று வருடங்களில் நிறைவேற்றப்படும்-ஹிஸ்புல்லாஹ் உறுதி







(கொழும்பு)

"கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது காத்தான்குடி மக்களின் தேவைகள்- அபிவிருத்தி தொடர்பாக நாங்கள் பல்வேறு வாக்குறுதிகளையும் மும்மொழிவுகளையும் வழங்கியிருந்தோம். நாங்கள் வழங்கிய சகல வாக்குறுதிகளும் எதிர்வரும் மூன்று வருடங்கில் நிறைவேற்றப்படும்" என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன நடந்தாலும் நாடு மிகவும் மோசமான பொருளாதார, அரசியல் சூழ்நிலையில் உள்ளது. எனவே, அதனை ஸ்திரப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 10 உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் காத்தான்குடி நகர சபை செயலாளர் றிப்கா சபீன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம மற்றும் கௌரவ அதிதியாக இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது, காத்தான்குடி நகர சபையின் தலைவராக எஸ்.எச்.எம்.அஸ்பர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதோடு, எம்.ஐ.எம்.ஜெஸீம் பிரதித் தலைவராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பின்னர், அங்கு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நீதிமன்றில் ஹெரோயினுடன் பெண் கைது

(கொழும்பு)

கொழும்பு நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு ஹெரோயின் எடுத்து வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்பதோடு, குறித்த பெண்ணிடமிருந்து 4 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் தனது தந்தையின் வழக்கு விசாரணைகளை காண நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தந்திருந்தார் எனவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள குறித்த பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# குடும்பஸ்தர் அடித்துக் கொலை

திம்புள்ள-பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகல பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்யபபட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான ரகு என்பவரே நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இக் கொலைக்குக் காரணமான சந்தேக நபர் கொலைக்குப் பயன்படுத்திய மண்வெட்டியுடன் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். மேலும் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் வைத்திய பரிசோத்னைக்காக கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கிழக்குப் பல்கலை.ஊழியர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டம்





(ஏறாவூர்)

கிழக்குப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். மாதாந்த நிலுவைக் கொடுப்பனவு உட்பட ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 34 நாட்களாக பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போதிலும் உயர்கல்வி அமைச்சோ, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவோ எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1375

Search for people, places and things Nagendram Home

### சாரா

மனதை அடக்க நினைத்தால் அலையும், அறிய நினைத்தால் அடங்கும்...



தவறு செய்வதும் மனம்தான், இனி தவறு செய்யக்கூடாது என்று தீர்மானிப்பதும் மனம்தான்!

### சாரதா

ஒருவேளை உணவிற்கு ஒரு இலட்சம் செலவு செய்பவர்கள் உள்ள நாட்டில்தான்...



ஒருவேளை உணவிற்கு ஒரு ரூபாய் கூட இல்லாமல் பட்டினியில் கிடக்கின்றனர்....!

### சாலினி

வாடகை கொடுக்காமல் நாம் தங்கிய ஒரே அறை தாயின் கருவறை...



கோடி கொடுத்தாலும் திரும்ப வாங்க முடியாதது தாயின் அன்பும் பாசமும்....!

### சாந்தி

வாழ்க்கையில் எதிர்பார்ப்பதை விட எதிர்கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள்....



இங்கு எதிர்பார்க்கும் வாழ்க்கையை விட எதிர்கொள்ளும் வாழ்க்கையே கிடைக்கின்றது...!

### சாமினி

ஒவ்வொரு தடவையும் வயல்களின் வரம்புகளில் செல்லும் போதும் பயிர்கள் எல்லாம் வருடுகிறது



தன்னை வெட்டிவிடாதே என்று அல்ல...! விவசாயத்தை விடாதே என்று....!

### சாந்தா

ஒருவரின் தேவையைப் பொறுத்தே உங்களோடு உறவாடும் நேரம் நிர்ணயிக்கப்படுகின்றது...



தேவைகள் குறையக் குறைய நேரங்களும் தேடல்களும் குறைந்தே போகின்றது...


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உள்ளூராட்சித் தேர்தல்-2018 ஒரு பார்வை

நீண்ட இழுபறி, கால விரயம் மற்றும் தேர்தல் முறை வாதப்பிரதிவாதங்களின் பின்னர் வட்டார விகிதாசாரம் 60:40 என்ற முறைப்படி உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றது. மேலும் பெண்களுக்கு 25வீத ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதுடன் வட்டார ரீதியில் பெண்கள் குறித்த சபை மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கையில் 10வீதம் வேட்பாளர்களாக இருக்க வேண்டுமென்றும் விகிதாசார வேட்பாளர்கள் பட்டியலில் 2 இல் பெண்கள் 50 வீதமாக இருக்க வேண்டுமென்றும் நிபந்தனைகள் இருந்தன. உள்ளூராட்சித் தேர்தல் பெப்ரவரி 10 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேச சபை நீங்கலாக நாடு முழுவதற்கும் இடம் பெற்றது.

25 மாநகரசபைகள், 41 நகரசபைகள், 274 பிரதேச சபைகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நாடுமுழுவதும் அமைதியாக இடம் பெற்றதுடன் மிகக் குறைவாக இருந்தன. இத்தேர்தல் மூலம் 4992 பேரும் விகிதாசார முறை மூலம் 3394 பேருமாகத் தேர்தல் நடைபெற்றது. ஆனால் தொங்கு நிலை காரணமாக வட்டார ரீதியில் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5332 க்கும் மேற்பட்டும் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 8700க்கும் கிட்டியதாகவும் விளங்கியது. தேர்தல் முடிந்து அது தொடர்பான நிர்வாகப் பணிகள் மேற்கொள்ள ஏழு கிழமைகளுக்கு மேல் எடுத்துள்ளது. தற்பொழுது சபைகள் அமைக்கும் செயற்பாடுகளும் மாநகர முதல்வர், நகர முதல்வர், பிரதேச சபைத் தலைவர், உபதலைவர் தேர்வுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று சபைகள் இயங்கத் தொடங்கி விட்டன.

தேர்தல் முடிந்து வெளிவந்த தேர்தல் கலப்பு விகிதாசாரத் தேர்தல் முறை பற்றி சார்பான, எதிரான கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. அத்தேர்தல் முறை ஜேர்மனி, பொலிவா போன்ற ஒரு சில நாடுகளிலேயே பின்பற்றப்படுகின்றது. இக்கலப்புத் தேர்தலில் பெரும்பாலும் எல்லாச் சபைகளிலும் எந்தவொரு பிரதான கட்சியும் பெரும்பான்மை அங்கத்தவர்களைப் பெற முடியவில்லை. இதனால் சபைகளை நிர்வகிக்க பெரும்பான்மை இல்லாததால் மற்றக் கட்சிகளின் ஆதரவை நாட வேண்டியுள்ளதெனக் கட்சிகள் கவலை தெரிவிக்கின்றன. மேலும் பிரதான கட்சிகள் வட்டாரங்களில் வெற்றி பெற்ற பொழுதும் விகிதாசார ரீதியில் 50% எல்லையைக் கடக்கவில்லை. இம்முறையில் சிறிய கட்சிகள் அங்கத்தவர்களைப் பெற சாதக நிலைமைகள் காணப்பட்டன. மேலும் வெட்டுப் புள்ளி இல்லாததால் மிகக் குறைந்த வாக்குகளுடன் சிறு கட்சிகள் அங்கத்தவர்களைப் பெற்றுள்ளன. பெரிய கட்சிகள் வட்டாரங்களில் முதலாவதாக வந்து வட்டார அங்கத்தவர்களைப் பெற்றதுடன் பல சந்தர்ப்பங்களில் தொங்குநிலை ஆசனங்களைத் தக்க வைத்துள்ளனர். கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி 51 ஆசனங்களுக்கு உரித்தாக இருந்த பொழுதும் 60 வட்டாரப் பிரதிநிதிகளைப் பெற்றதால் மேலதிகமாக 9 ஆசனங்களைப் பெற்றுள்ளது.




இத் தேர்தல் முறை முழுமையாக எல்லோரையும் உள்வாங்கிய ஜனநாயக கலப்புத் தேர்தல் முறை என்று குறிப்பாக இன்று சிறுபான்மையாக வாழும் மக்கள் குறிப்பிடுகின்றார்கள். முன்னைய தேர்தல் முறையில் காணப்பட்ட குறைகள் இப்புதிய கலப்புத் தேர்தல் முறையில் நீக்கப்பட்டுள்ளன.

1. முன்னைய முறையில் காணப்படாத பொறுப்புக்கூறலை நீக்க புதிய முறையில் வட்டார ரீதியில் அங்கத்தவர் தெரிவு உள்வாங்கப்பட்டுள்ளது. அதனால் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் பிரதிநிதி கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்க வட்டாரப் பிரதிநிதித்துவம் சிறந்த முறையாகும்.

2.ஒவ்வொரு கட்சியும் தாங்கள் தாங்கள் பெற்ற வாக்குகளுக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெற இக்கலப்புத் தேர்தல் வழிவகுத்துள்ளது. இதனால் உள்ளூராட்சி சபைகளில் சிறிய கட்சிகள் மற்றும் பரவலாக வாழும் சிறிய இன, மத, சமூக, சமுதாயங்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற முடியும்.

3. முன்னைய தேர்தல் விகிதாசார விருப்பு வாக்கு முறைகளால் ஒரே கட்சி வேட்பாளர்களுக்கிடையே போட்டி, குரோதங்கள் ஏற்பட்டன. மேலும் விருப்பு வாக்குகளை பெற கட்சி வேட்பாளர்கள் மூவர், இருவர் என இணைந்து செயற்பட்டு தமது கட்சி பிறவேட்பாளர்களுடன் முரண்படவேண்டி இருந்தது. மேலும் சிறுபான்மை சமூகத்தினர் விருப்பு வாக்குகளைப் பெற முடியாது தேர்தல்களில் தோல்வியைத் தழுவியதால் இம்முறை நீக்கப்பட்டதும் கட்சிகளுக்கு ஒற்றுமை ஏற்பட வழிவகுத்ததுடன் சிறுபான்மையினர் தமது பிரதிநிதித்துவத்தைப் பெறவும் வழிவகுத்தது.


இலங்கையில் உள்ளூராட்சிக் கட்டமைப்பில் முதல் முதலாகப் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டது. ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் 25வீதம் பெண்களாக இருக்க வேண்டுமென்பது சட்டபூர்வமான நிபந்தனை.

மேலும் வட்டார அடிப்படையில் நடைபெறும் தேர்தலில் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் மொத்த வட்டாரப் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் 10% பெண்கள் வேட்பாளர்களாக நியமிக்கப்படவேண்டுமென்பதும் விகிதாசாரப் பட்டியலில் பெண்கள் 50 வீதமாக நியமிக்கப்பட வேண்டுமென்பதும் சட்ட பூர்வ தேர்தலில் பெண்கள் அரசியலில் அபிவிருத்தியில் பங்கு கொள்ள நல்ல இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாகாணசபை மற்றும் பாராளுமன்றத்திலும் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் செயற் பாடு முன்னெடுக்கப்படலாம்.

1. வட்டார விகிதாரசார கலப்பு முறையில் ஒரு கட்சி வட்டாரங்களில் கூடுதலாக வெற்றி பெற்று விகிதாசார ரீதியில் குறைவான அங்கத்தவர்களைப் பெறும் நிலையில் வட்டார ரீதியில் கூடுதலாகப் பெற்ற ஆசனங்களை வைத்திருக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. தொங்கு நிலை அங்கத்துவம் எனப்படும் (Over hang seats) இம்முறையால் பெரிய கட்சிகளே கூடுதலாகப் பயன்பெறுகின்றன. உதராணமாக வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 17 வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளது.

எனினும் விகிதாசார அடிப்படையில் இக்கட்சி க்கு இச் சபையில் 13 அங்கத்தவர்களைப் பெறமுடியும். தொங்கு நிலை முறையில் இச் சபையில் கூட்டமைப்பு 4 அங்கத்தவர்களை மேலதிகமாகப் பெற்றுள்ளது.

இத் தேர்தல் முறையில் காணப்படும் குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்கள், இத்தேர்தல் முறையில் கட்சிகளின் செயலாளர்களுக்கு மிகக் கூடிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன; மக்கள் உரிமைகளைப் பறித்து கட்சி செயலாளர்களிடம் கொடுத்து அவர்கள் சர்வாதிகாரமாக நடக்கவும் வழிவகுத் துள்ளது; வேட்பாளர் தெரிவிலும், விகிதாசார இடத் தெரிவிலும் காலத்துக்குக் காலம் வெற்றி இடங்களை நிரப்புவதிலும் கட்சிச் செயலாளர் முடிவு இறுதியானது. பல சந்தர்ப்பங்களில் ஆரம்பத்தில் கட்சிகள் அங்கத்தவர்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகள் பின்னர் கடைப்பிடிக்கப்படுவதில்லை; குறிப்பாக தென்னிலங்கையில் வேட்பாளர்களுக்குத் தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகள் தேர்தலின் பின் நிறைவேற்றப்படுவதில்லை; கட்சிச் செயலாளர்கள், பிரதிநிதிகள் சிபாரிசு செய்வதில் ஒரு தெளிவான கட்டளைக் கல்லைப் பயன்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

மேலும் வெட்டுப்புள்ளியோ அல்லது போனஸ் ஆசனங்களோ இல்லாததால் பல சிறு சிறு கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் அங்கத்துவத்தை பெறும் நிலையில் உள்ளூராட்சிச் சபைகளின் ஸ்திரத் தன்மை நலிவடைந்து, நிர்வாகம் சிறப்பாக நடைபெறுவதற்கு பிரச்சினைகள் எழலாம்; மேலும் வட்டாரங்கள் சிறிதாக இருப்பதால் கட்சிகளின் கொள்கைகள் முக்கியத்துவம் பெறாது வேட்பாளர்கள், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் என வாக்குகளைப் பெறுவதால் கட்சிகள் பாதிக்கப் படுகின்றன. இத்தேர்தல் முறை குறிப்பாக பெரிய கட்சிகளிலும் பார்க்க சிறிய கட்சிகளுக்கே சாதகமாக இருக்கின்றதென்ற கருத்து நிலவுகின்றது. ஆனால் சிறிய கட்சிகள் வட்டார ரீதியில் வெல்ல முடியாத நிலையில் இருப்பதுடன் குறித்த வாக்குகளுக்குரிய அங்கத்துவத்தையே பெறுகின்றனர். உண்மையில் இதுவே ஜனநாயகம்.

முன்னைய தேர்தல் முறையில் விகிதாசார முறையுடன் விருப்பு வாக்கு முறையும் இருந்ததால் சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக மக்களுக்கு தங்கள் பிரதிநிதித்துவத்தை பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. கட்சிகளின் நியமனம் கிடைத்தும் உரிய விருப்பு வாக்குகளைப் பெறுவது சிறுபான்மையினருக்கு மிகவும் கடினமாக இருந்தது.

(தொடரும்)

# நல்லாட்சி தொடரும்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து எனக்கு எதுவும் தெரியாது – சந்திரிகா

(யாழ்ப்பாணம்)

ஒன்றிணைந்த எதிர்க் கட்சியால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் தோல்வியுற்றாலும் நல்லாட்சி தொடரும் என முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.




நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர், நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் தோல்வியுற்றால் அடுத்து என்ன நடைபெறுமென ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் இந்த விடயம் பிரதம ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமானது. இதனால் நல்லாட்சிக்கு பாதிப்பில்லை. நல்லாட்சி தொடரும் எனத் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# பிரதமரின் ஏமாற்று வேலை

## சீ.வீ.கே. சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்த போதிலும் முன்னரை விட தற்போது மேம்பட்டு கொண்டு தான் வருகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியது போன்று கல்வி நிலை குறைந்து விட்டது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை ஆசிரியர் சங்கங்களும் கூறியுள்ளன.

வடக்கின் கல்வியை முன்னேற்றுவதற்காக 10 வருட திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

இது ஏமாற்று வேலையாகும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவ ஞானம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கில் கல்வியை உயர்த்த பத்து வருட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கூறியுள்ளார். இது தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உண்மையாக வடக்கில் கல்வி நிலையை உயர்த்துவதற்கு திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது என்றால் 2 அல்லது 5 வருடத்திற்குள் துரித திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். 10 வருட திட்டம் என்றால் இவர்களுக்கு பின்னர் வருகின்ற ஆட்சியாளர்கள் அதனை நடைமுறைப்படுத்துவார்களா? என்பது சந்தேகமே.

இது தவிர வடக்கு மாகாண ஆசிரியர் நியமனத்தில் மத்திய அரசாங்கம் தேவையற்ற தலையீடுகளை தவிர்க்க வேண்டும். இந்த தலையீடுகளால் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பகிர்ந்தளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அடுத்து அரசு எங்களுக்கான திட்டங்களை தனியாக முன்வைக்காமல், எங்களோடு கலந்துரையாடி



திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அல்லது நாங்கள் முன்வைக்கும் திட்டங்களை அங்கீகரிக்க வேண்டும்.

ஆனால் தாங்கள் நினைப்பதை தான் மத்திய அரசு வடக்கில் செய்து வருகின்றது. திட்டமிடப்படாத திட்டங்கள் நடைமுறைப்படுத்து உண்மையான பலனை தந்து விடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் விசேட முக தாடை வாய் சத்திரசிகிச்சை

## விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் முகதாடை வாய் சத்திர சிகிச்சைப் பிரிவானது (Oral & Maxillo Facial Unit – OMF unit) முக தாடை சம்பந்தமான நோய்களையும் குறைபாடுகளையும் கண்டறிவதுடன் அதற்குரிய சிகிச்சைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதனடிப்படையில்,

பிறப்பிலிருந்து வருகின்ற குறைபாடுகள் (Congenital Craniofacial Malformations), முக அமைப்பு சீராக்கல் - தாடை அமைப்பு, காது அமைப்பு, நெற்றியின் அமைப்பு, கட்டிகள், புற்றுநோய் கட்டிகள் அகற்றல், விபத்துக்களால் ஏற்படுகின்ற முகதாடை என்பு உடைவுகளை சீரமைப்புச் செய்தல் ( Post Traumatic Facial Reconstructions), பாரிச வாத நோயால் முகத்தசைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை சீராக்கல் (Facial Re- Animation) போன்ற பல சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு சேவையாக முக தாடை சத்திரசிகிச்சை நிபுணத்துவக் குழாம் பல பாகங்களிலிருந்தும் யாழ்ப்பாணம் வருகை தந்து இம்மாத பிற்பகுதியில் மேலதிக சிகிச்சைகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இதில் பயன்பெற விரும்புவோர் யாழ்.போதனா வைத்தியசாலை முக தாடை வாய் சத்திரசிகிச்சைப் பிரிவில் (OMF Unit) கிழமை நாட்களில் நேரடியாகவும் மற்றும் 077 993 8324 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-9)




# தொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்க யாழில் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உலக வங்கி நிதி உதவியுடன் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு மற்றும் வட மாகாண விவசாய அமைச்சின் அனுசரணையுடன் பழங்கள், மரக்கறிப் பயிர்கள் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, வளர்ப்பு மீன் உற்பத்தி, வாசனைத் திரவிய பயிர் வளர்ப்பு மற்றும் இத்துறைகள் சார்ந்த கைத்தொழில் துறை விருத்திக்கு இணைக் கொடை நிதி வழங்குதல் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் விவசாய வியாபார அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் செயற்றிட்டம் ஊடாக தனியார் நிறுவனங்கள், விவசாய அமைப்புக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் என்பவற்றிற்கு கடன் உதவி வழங்குதல் ஆகிய இரு செயற்றிட்டங்களுக்கான பதிவு செய்யப்பட்ட பயனாளிகளை தெளிவுபடுத்தும் செயலமர்வு நாளை மறுதினம் காலை 8 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே பதிவு செய்யாத இச்செயலமர்வில் பங்குபெற விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் 021 221 7357 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என வடக்கு விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ)

# க.பொ.த (ச/த) பெறுபேறுகள்-2017

**யா/ஏழாலை மகா வித்தியாலயம்**

எஸ்.நிரோஜினி-9ஏ, ஜே.ரெனா-8ஏசி, ரி.டினேயா-5ஏ3சிஎஸ், ரி.டவியன்-7ஏபிஎஸ், கே.நைத்திரன்-2ஏ4பி3சி.

**யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்**

ஏ.ஆனந்தராஜ்-7ஏபிஎஸ், ர.குகரூபன்-2ஏ5பிசிஎஸ், எஸ்.பிரகாஷ்-2ஏ3பிசி2எஸ், எஸ்.சான்றோன்-2ஏ3சி3எஸ், ஆர்.ஐங்கரன்-ஏ3பி3சிஎஸ், ரி.பிருந்தாபன்-ஏபிசி4எஸ், வை.பிரணவன்-2பி2சி3எஸ், ஆர். கோகுல்ராஜ்-பி2சி4எஸ், பி.சிறீராம்-4சி4எஸ், எஸ்.விஸ்வரூபன்-3சி4எஸ்

**யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்**

கே.மதுஷா-9ஏ, ஆர். டினுசா-7ஏ2பி, ஏ.நிவோல்ரா- 7ஏபிசி, கே.ஜெனார்த்தனன்-7ஏபிசி, கி. கிறிஸ்ரிக்கா-7ஏசிஎஸ், ச.ஜெனனி-6ஏ2பிசி, கே.விஷ்ணுவர்த்தனன்- 6ஏபி2சி, ஜீ.ஜீவனா-6ஏபிசி, வி.மேரிவிதுஷா-5ஏ4பி, என்.சுகன்யா-5ஏபி3சி, ஜெ.மேரி பௌஸ்ரினா-4ஏ2பி3சி, பி.கேமலதா-4ஏ2பி3சி, கே.டிலக்ஷன்-4ஏ4பி, எஸ்.அஜித்குமார்-4ஏ2பி2சி, ரி.திருக்குமார்-3ஏ4பி2சி, கே.தர்சன்-3ஏ3பி2சிஎஸ், எஸ்.கஜானன்-3ஏ2பி2சி2எஸ்

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய (முனி கோவிலடி) வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நிலைய மண்டபத்தில் உள்ளூராட்சி திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் சு.உதயசீலன் தலைமையில் நடைபெறும். (இ)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி பொறுப்பாளர் அருட்சகோதரி பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோட்டக்கல்வி அதிகாரி பி.கே.அன்ரன், சிறப்பு விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-106)

# செலான் வங்கியின் 30 வருடகால சேவையினை கொண்டாடும் முகமாக விசேட சமய வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

வங்கிச்சேவையில் பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி தனது 30 வருடவங்கிச் சேவையினை கொண்டாடும் முகமாக பல்வேறு சமய வழிபாடுகளை ஏற்பாடு செய்துள்ளது.

இந்துசமயவழிபாடுகள் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 7.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்தநிகழ்விற்கு வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன, வங்கி அதிகாரிகளும் வாடிக்கையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

1987ஆம் ஆண்டு நிறுவப்பட்டசெலான் வங்கியானது 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி கொழும்பு கோட்டையில் தனது வங்கிச் சேவையை ஆரம்பித்தது. ஆரம்பத்திலிருந்தே, அன்புடன் அரவணைக்கும் வங்கி என்ற வகையில் செலான் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு புதுமையான மற்றும் புரட்சிகரமான வங்கியியல் சேவைகளை வழங்கி வருவதுடன் நாடளாவிய ரீதியில் 167 கிளைகளை கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கருங்கல்லுக்குள் மறைத்து கொண்டுவரப்பட்ட முதிரைக் குற்றிகள் கொடிகாமத்தில் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

வன்னிக் காட்டுப் பகுதியில் தறிக்கப்பட்டு சட்டவிரோதமான முறையில் கருங்கலுக்குள் மறைத்து கொண்டு வரப்பட்ட முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிரிசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொடிகாமம் பொலிஸ் பிரிவின் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் உத்தரவிற்கமைய மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இம் முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வன்னியிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு கருங்கல்லுக்குள் மறைத்துக் கொண்டு வரப்பட்ட நிலையில் ஏழு அடி முதிரை மரக்குற்றிகள் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மரங்களை ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தையும் கொடிகாமம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந் நடவடிக்கையில் கொடிகாமம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் கே.தினேஸ், அ.அஜந்தன், பிரதீப் சுரங்க என்.விஜிதரன் ஆகியோர் ஈடுபட்டனர் (இ-7-28)




# குணசேகரன்

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்திலேறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் அவன் அதை தன் தோளில் சுமந்தவாறு மயானத்தை நோக்கி செல்லுகையில் அதனுள் இருந்த வேதாளம் அவனை நோக்கி, "மன்னா, உன்னைப் போல் சிலர் வாழ்க்கையில் இலட்சியவாதியாகத் திகழ்பவர்கள் ஒரு குறிக்கோளை வகுத்துக் கொண்டு அதை அடைய அரும் முயற்சி செய்வார்கள்.

ஆனால் சிலர் வாழ்க்கையில் எந்தவிதப் பற்றுதலும் இல்லாமல் ஞானிபோல் திரிபவர்கள் திடீரென தடம்மாறி பயங்கர முயற்சி செய்து பல ஆண்டுகளாய் அடைய நினைத்ததை சில நாட்களிலேயே பெற்றுவிடுவர். அப்படிப்பட்ட குணசேகரனின் கதையைக் கூறுகிறேன் கேள்" என்றது.

விராக நாட்டை ஆண்டு வந்த சந்திரவர்மன் என்ற சிற்றரசருக்கு இரட்டைப் பிள்ளைகள் இருந்தனர். பெரியவன் குலசேகரன், இளையவன் குணசேகரனிடமிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தான். சிறு வயது முதல் தான் மன்னனாவது பற்றி குலசேகரன் கற்பனை செய்வதுண்டு. தனக்கு சமமான அந்தஸ்து படைத்தவர்களுடன் மட்டுமே பழகுவான். ஆனால் குணசேரகன் ஆசாபாசங்கள் அற்றவன். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதங்கள் அவனுக்குக் கிடையாது. அவனுக்கு ஆட்சிபுரியும் ஆசை சிறிதுமில்லை.

இருவருடைய பிறந்த நாளையும் சந்திரவர்மர் மிக விமர்சையாகக் கொண்டாடுவதுண்டு. அவ்வாறு அவர்களின் பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடும்போது அவர்கள் இருவருக்கும்ஒரு கருடனின்பொம்மை பரிசாகக் கிடைத்தது. அதை அனுப்பியவர் சந்திரவர்மரின் குலகுரு சம்புநாதர்! அந்த பொம்மை பெரிதாக இருந்தது. அது மட்டுமின்றி, அதன் காதருகில் பொருத்தப்பட்டிருந்த சாவியைத் திருகினால் அது சற்று நேரம் வானில் பறந்து சென்று திரும்பியது. அதில் ஒருவர் மட்டுமே அமர்ந்து செலுத்த முடியும்.

தங்களுக்குப் பரிசாகக் கிடைத்த பொம்மையை எடுத்துக் கொண்டு இருவரும் நந்தவனத்திற்குச் சென்றனர். முதலில் குலசேகரன் அதன் மீதேறி அமர்ந்து சாவியை முடுக்க, அது பறந்தது. சற்று நேரம் பறவையில் பறந்து களித்தபின், தன் தம்பிக்கு அதை அளித்தான். அப்போது அரண்மனை வேலைக்காரி ஒருத்தியின் மகனான சாரதி அந்தப் பறவையில் தானும் அமர்ந்து பறப்பதற்கு விரும்பினான்.



அவனுக்கு அது தகுதியற்ற ஆசை என்று அவன் தாய் உணர்த்தினாள். அதைத் தற்செயலாக கவனித்த குணசேகரன் அவளிடம் "உன் மகன் சாரதி. எனக்கு சமமான வயதுடையவன். இந்த வயதில் இத்தகைய ஆசை தோன்றுவது நியாயமே! ஆகவே, பொம்மை மீது அமர்ந்து பறக்க அவனுக்கு வாய்ப்புத் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு, தான் பறவை மீது ஏறாமல் சாரதியை ஏறச் சொன்னான். அதைக்கண்ட குலசேகரன் ஓடி வந்து அவனைத் தடுத்தான்.

அவன் செய்கையை அனைவரும் ஆதரித்தது குணசேகரனுக்கு வியப்பையும் வருத்தத்தையும் அளித்தது. "சாரதி பறவையில் உட்காரக் கூடாது என்றால் நானும் அதில் உட்கார மாட்டேன்" என்ற குணசேகரன் "நான் குலகுரு சம்புநாதரிடம் சிஷ்யனாகச் சேர்ந்து, இதேபோல் ஒரு பொம்மையைப் படைத்து அதில் சாரதியை உட்காரச் செய்வேன்" என்றான்.

அப்போது, சந்திரவர்மருக்கும் அதே யோசனை தோன்றியது. தன் புதல்வர்கள் இருவரையும் தன் குருகுல சம்புநாதரிடம் சீடர்களாக அமர்த்தி ராஜநீதி, பொறியியல், பொருளாதாரம் போன்ற அறிவியல் பாடங்களைக் கற்கட்டும் என்று எண்ணி, சம்புநாதரின் குருகுலத்தில் சேர்த்தார். சேர்ந்த நாள் முதல், குலசேகரன் அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுக் கொள்ள, குணசேகரன் பொறியியலில் மிக்க ஆர்வம் காட்டினான். சில நாட்களில் குணசேகரன் தான் கூறியது போல் ஒரு கருட பறவையைத் தயாரித்து அதில் சாரதியை ஏறச் சொன்னான். அவனுடைய சமத்துவ மனப்பான்மையைக் கண்டு வியந்து பாராட்டிய சம்புநாதர், "நீ சாதாரண மனிதனல்ல, நீ ஒரு மகான்!" என்று விமர்சனம் செய்தார்.

குருகுல சம்புநாதரிடம் கல்வி பயின்று முடித்தபின் இருவரும் அரண்மனை திரும்பினர். ஆனால் இருவரின் போக்கும் முற்றிலும் வேறுபட்டிருந்ததைக்கண்டு கவலையுற்ற சந்திரவர்மர் சம்புநாதரிடம், "குலசேகரன் தங்களிடமிருந்து அரசியலை நன்கு கற்றுக் கொண்டு விட்டான். ஆனால் குணசேகரன் அரசியலைப் பற்றிக் கற்றுக் கொண்டது போல் தெரியவில்லையே!" என்றார் மன்னர்.

"அவனுக்கு ஆட்சி புரிவதில் ஆர்வமில்லை. அதனால்தான் அவன் அரசியலை ஆர்வத்துடன் கற்கவில்லை" என்றார் சம்புநாதர். "குருநாதரே! என் இராச்சியத்தை இரண்டாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவனை மன்னன் ஆக்க விரும்புகிறேன்" என்றார் சந்திரவர்மர். ஆனால் சந்திரவர்மருடைய யோசனை அவருடைய தந்தைக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் சரியாகத் தோன்றவில்லை.

ஆகையால் அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் சந்திரவர்மர் அயல் இராச்சியத்தின் மீது

தொடரும்...




- ❖1865-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட் நகரைக் கைப்பற்றினர்.
- ❖1917-வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த விளாடிமிர் லெனின் ரஷ்யா திரும்பினார்.
- ❖1922-ஜோசப் ஸ்டாலின் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் முதற் பொதுச் செயலாளரானார்.
- ❖1958- பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி இராணுவம் ஹவானா மீது தாக்குதல் தொடுத்தது.
- ❖1966-சோவியத்தின் லூனா-10 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தை அடைந்தது. பூமியை விட வேறொரு விண் பொருளைச் சுற்ற ஆரம்பித்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- ❖1981- உலகின் முதலாவது பெயரத்தகு கணனி "ஒஸ்போர்ன் 1" சான் பிரான்சிஸ்கோவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பிறப்புகள்**

- ❖1781-சுவாமிநாராயண், இந்திய மதகுரு (இ. 1830)
- ❖1783-வாசிங்டன் இர்விங், அமெரிக்க எழுத்தாளர், வரலாற்றாளர் (இ. 1859)
- ❖1841-எர்மன் கார்ல் வோகல், செருமானிய வானியற்பியலாளர் (இ. 1907)
- ❖1903-கமலாதேவி சட்டோபாத்யாய், இந்திய சமூக சீர்திருத்தவாதி, பெண்ணியவாதி, விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 1988)
- ❖1904-ராம்நாத் கோயங்கா, இந்தியப் பத்திரிகையாளர் (இ. 1991)
- ❖1907-சிதம்பரநாதன் செட்டியார், தமிழகத் தமிழறிஞர், மொழியியலாளர் (இ. 1967)
- ❖1949-ராம நாராயணன், தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் (இ. 2014)
- ❖1950-இந்திரஜித் குமாரசுவாமி, இலங்கைத் தமிழ் பொருளியலாளர், மத்திய வங்கி ஆளுநர்
- ❖1951-பூ.செந்தூர் பாண்டியன், தமிழக அரசியல்வாதி (இ. 2015)
- ❖1954-க. கிருஷ்ணசாமி, இந்திய மருத்துவர், அரசியல்வாதி
- ❖1955-அரிகரன், இந்தியப் பாடகர்
- ❖1956-மோகன் ராமன், இந்தியத் திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்
- ❖1973-பிரபுதேவா, தென்னிந்திய நடிகர், நடன அமைப்பாளர்
- ❖1983-சிரேயா ரெட்டி, தென்னிந்திய நடிகை

**இறப்புகள்**

- ❖1325-ஹசரத் நிஜாமுதீன், சூஃபி அறிஞர் (பி. 1238)
- ❖1680-சிவாஜி, மராட்டியப் பேரரசர் (இ. 1630)
- ❖1992-எஸ்.எஸ்.ராமசாமி,தமிழக அரசியல்வாதி (பி. 1918)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 35 | 50 | 40 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 75 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 30 | 50 | 50 | 60 |
| தக்காளி | 20 | 30 | 20 | 30 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 30 | 30 | 50 | 60 |
| கரட் | 100 | 80 | 80 | 80 | 100 | 160 |
| பூசணி | 40 | 80 | 20 | 50 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 30 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 30 | 60 | 30 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 110 | 120 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 55 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 25 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 40 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 40 | 100 | 30 | 60 | 50 | 80 |
| லீக்ஸ் | 140 | 150 | 110 | 80 | 180 | 240 |
| பீற்றூட் | 20 | 30 | 20 | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 25 | 60 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 150 | 400 | 300 | 200 |
| போஞ்சி | 150 | 200 | — | 120 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | — | 50 | — | 60 |
| கீரை-1பிடி | 40 | 20 | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 180 | 140 | 110 | 200 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 30-90 | 90 | 75 | 75 |
| இராசவள்ளி | 180 | 150 | 110 | 160 | 260 | 160 |
| வெங்காயப்பூ | 100 | — | — | — | 140 | 160 |
| முள்ளங்கி | 30 | — | 20 | 40 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | — | 10 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 20 |
| சுரப்பலா | 80 | — | — | 60 | — | 80 |

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒருமுறை தான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். - மெகலன்

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

## பிரதமர் ரணிலை ஆதரிக்க நிபந்தனை ஏதும் விதித்தீர்களா?

நாளை விடிந்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தப்பிப் பிழைப்பாரா? அல்லது தள்ளுண்டு போவாரா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எது எவ்வாறாயினும் இன்றும் நாளையும் தென்பகுதியில் ஒரு பரபரப்பு நிலைமை இருக்குமென்பது தவிர்க்க முடியாததாகிறது.

ஒரு பிரதான தேர்தல் முடிவை எதிர்பார்ப்பது போல நாட்டு மக்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முடிவை எதிர்பார்த்து இருக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது தனித்து ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் இலக்கு வைத்து நடப்பதல்ல. மாறாக ஓர் ஆட்சிப் பீடத்துக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்று கணிப்பீடு செய்வதே பொருத்தமானது.

ஆக, கூட்டு எதிரணியினர் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எப்பாடுபட்டாவது முறியடிப்பதென்பது நல்லாட்சியின் தலையாய கடமையாகும்.

இந்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பவர்களைத் தம் பக்கம் இழுப்பதற்கும் அதற்காக சில உறுதி மொழிகளை வழங்குவதற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தயாராக இருப்பர் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கக் கூடியவர்கள் என்ற நம்பிக்கை யார் மீது இருக்கிறது என்றால்; அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதாகவே இருக்கும்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றும் பொருட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதை இங்கு நாம் கூறுவதன் நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டாவது சந்தர்ப்பமொன்று கிடைத்துள்ளது என்பதாக ஞாபகப்படுத்துகிறது.

இதை நாம் தெரிவிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதவ வேண்டும் என்று யாரும் பொருள் கொள்ளக்கூடாது.

நம்மைப் பொறுத்தவரை பிரேரணை மீது என்ன முடிவை எடுப்பது என்பதை கூட்டமைப்பே தீர்மானிக்கட்டும்.

அந்தத் தீர்மானம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றுவது என்பதாக இருந்தால், தயவுசெய்து உங்கள் ஆதரவுக்காக நிபந்தனை விதியுங்கள்.

இந்த நிபந்தனையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை; காணாமல்போனவர்கள் தொடர்பான விவகாரம் என்ற இரண்டு விடயங்களையும் முன்வைக்கத் தவறாதீர்கள்.

# இனமுறுகல்கள் ஏற்பட இதுதான் காரணம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா. கூறுகிறார்

(கொழும்பு)

மத நல்லிணக்கம் இன்மையே அண்மையில் எமது நாட்டில் ஏற்பட்ட தேவையற்ற இன முறுகல்களுக்கு காரணம். இதனால் யாரும் இலாபம் அடையவில்லை. ஆனால் வன்முறையால் ஏற்பட்ட பாதிப்பிற்கு அனைவரும் பங்குதாரர்களாக மாறியிருக்கின்றோம் என கல்வி இராஜாங்க அமைச்சர வே.இராதாகிருஷ்ணன தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் சமாதான கல்வி மற்றும் நல்லிணக்க பிரிவும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த ஆசிரியர் மாணவர்களுக்கு இடையிலான கலாசார பரிமாற்றம் மற்றும் புரிந்துணர்வு தொடர்பான செயலமர்வு ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத நல்லிணக்கம் இல்லாத காரணத்தால்தான் கடந்த காலங்களில் தேவையற்ற இன முறுகல் நிலை ஏற்பட்டது.

இதில் யார் இலாபம் அடைந்தார்கள் என்றால் யாருமில்லை. ஆனால் அந்த நிகழ்வில் ஏற்பட்ட பாதிப்பிற்கு அனைவரும் பங்குதாரர்களாக மாறியிருக்கின்றோம். அதாவது நாம் அனைவரும் அந்த நட்டஈட்டை வழங்கும் பொழுது அதற்காக நாமும் ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்திற்கு வரி செலுத்தியிருக்கின்றோம்.

எனவே இதில் யாரும் வெற்றி பெறவில்லை என்பதை அனைவரும் புரிந்து கொளள வேண்டும். எனவே இன்றைய காலகட்டத்தில் இந்த நாட்டினுடைய பிரஜைகளையும் எதிர்கால சந்ததியினரையும் சரியாக வழி நடத்தக் கூடிய பொறுப்பு ஆசிரியப் பயிலுநர்களான உங்களிடம் இருக்கின்றது.

மனிதர்கள் மதங்களுக்குள் சிக்குண்டு தவிக்கின்றார்கள். தனது மதத்திற்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை மற்ற மதங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதை மறந்து செயற்படுகின்றார்கள். மனிதனிடம் மதம் இருக்க வேண்டும். ஆனால் மனிதன் மதம் பிடித்தவனாக இருக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தவிசாளர் தெரிவில் கூட்டமைப்புக்கு ஐ.தே.கட்சி வழிமொழிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவில், தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டபோது, அவரை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் வழிமொழிந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் மானிப்பாய் பிரதேச சபையினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தவிசாளர்கள் தெரிவுகள் நடைபெற்று வருகின்ற நிலையில் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவும் நேற்று இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைச் சேர்ந்த வலி. தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் மீண்டும் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடைய பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் முன்மொழிய, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் வழிமொழிந்துள்ளார். உபதவிசாளராக சின்னையா கணேசவேல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி 9 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் சிறிலங்கா சுதந்திர கட்சி 7 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக்கூட்டணி 3 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி. 3 ஆசனங்களையும் ஐ.தே.க 2 ஆசனங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## வெப்பம் இம்மாத இறுதிவரை நீடிக்கலாம்

(கொழும்பு)

வெப்பமான காலநிலை இம்மாதம் இறுதி வரை நீடிக்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

காற்றின் வேகம் குறைவடைந்தமை உள்ளிட்ட பல காரணிகளால் வெப்பமான வானிலை அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் வெப்பத் தின அளவு 1 முதல் 3 செல்சியஸ வரை அதிகரித்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

## நாகர்கோவில் கோஷ்டி மோதல்

## எட்டுப் பேர் படுகாயத்துடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

கோஷ்டி மோதலில் காயங்களுக்கு உள்ளான எட்டுப் பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் இருசாரருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் கோஷ்டி மோதலாக மாறி மோதிக் கொண்டதாக கூறப்படுகிறது.

இதில் காயங்களுக்கு உள்ளான எட்டுப் பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், மணிபுரம் பிரதேசம், மணிபுரம் வீட்டுத்திட்டம், சுந்தரபுரம் வீட்டுத்திட்டம், சுந்தரபுரம் பிரதேசம், வரன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில தலைமன்னார்ப் பிரதேசம் ஒரு பகுதி, கட்டையடம்பன், மளவராயர்கட்டையடம்பன் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மூலைகளின் வெட்டு எப்படியிருந்தால் நல்லது?**

ஈசானியத்தில் வெட்டு: குடும்பத்திற்கு வேட்டு

ஆக்நேயத்தில் வெட்டு: வராது கேடு

வாயவியம் துண்டிப்பு: பெருக்கிடும் சுபம்

நைருதியில் வெட்டு: வராது கேடு

(தொடரும்)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கடவுளிடம் அனைத்து இயல்புகளும் இருக்கின்றன. ஆனால், மனித இயல்பு மூலமாகத்தான் நாம் அவரைக் காண இயலும்.
- தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு கடமையும் புனிதமானது தான். கடமையில் பக்தியுடன் இருப்பது தெய்வவழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்.
- ஒருவனுடைய பண்பை உருவாக்குவதில் இன்பம், துன்பம் இரண்டுமே சரிசமமான பங்கைப் பெறுகின்றன. அதிலும் இன்பத்தைவிட துன்பமே சிறந்த ஆசானாக அமைகிறது.
- வாழ்க்கையில் தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப்போல அதை விலக்கும் சக்தியும் நம்மிடம் உள்ளது.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

# கொலின்ஸ் உதைபந்தாட்டத் தொடர்
# அடுத்த சுற்றுக்கு முன்னேறிய அணிகள்




கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி Kings of Jaffna-2018 கடந்த மாதம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் மோதியது.

சம பலம் கொண்ட இரண்டு அணிகளின் மோதல் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இப் போட்டியில் 3:0 என்கின்ற கோல் கணக்கில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக அல்வாய் மனோகரா அணியின் நட்சத்திர வீரர் சாருஜன் தெரிவு செய்யப்பட்டார். நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகத்தினரை எதிர்த்து யங்கலயன்ஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது.

இப் போட்டியில் யங்கலயன்ஸ் அணி 1:0 என்கின்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழையும் வாய்ப்பை உறுதிப்படுத்தியது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக யங்கலயன்ஸ் அணியின் வீரர் பாலா தெரிவு செய்யப்பட்டார்.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் நவசக்தி விளையாட்டுக் கழகத்தினரை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம்மோதியது. எந்த அணி வெற்றி பெறப் போகின்றது என்ற ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புடன் நடைபெற்ற போட்டியில் இரண்டு அணியிலும் தலா ஒவ்வொரு கோலைப் போட போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

அதனைத் தொடர்ந்து வெற்றியைத் தீர்மானிக்கும் சமநிலைத் தவிர்ப்பு ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றில் நுழைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக பொலிகை பாரதி விளையாட்டுக் கழக வீரர் அனுஜனன் தெரிவு செய்யப்பட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மேற்கிந்திய தீவுகளைப்பந்தாடி வெற்றியை ருசித்தது பாகிஸ்தான்







மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக கராச்சியில் நடைபெற்ற முதல் இருபது-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் - மேற்கிந்திய தீவுகள் அணிகள் முதல் இருபது-20 போட்டியில் மோதின. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. அதனைத் தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் வீரர்களில் பாஹர் ஜமான் 39 ஓட்டங்கள், ஹுசைன் தலத் 41 ஓட்டங்கள், சார்ப்பரஸ் அகமது 38 ஓட்டங்கள், சோயிப் மாலிக் 37 ஓட்டங்கள் குவித்தனர். இதன்மூலம், பாகிஸ்தான் 5 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் துடுப்பாட்டத்தை துவங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள், பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால், 13.4 ஓவரில் மேற்கிந்திய தீவுகள் அணி 60 ஓட்டங்களுக்கு சுருண்டது. அந்த அணியில், சாமுவேல்ஸ் அதிகபட்சமாக 18 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் நவாஸ், முகமது ஆமிர் மற்றும் சோயிப் மாலிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதனால், பாகிஸ்தான் 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 3 போட்டிகள் கொண்ட இந்த இருபது-20 தொடரில் 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது. (க)

# மென்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பிக்கவும்

எதிர்வரும் புதுவருடத்தினை முன்னிட்டு மாதகல் பிரதேசத்தில் ஓய்வுபெற்ற தலைவர் Kapali khan நினைவாக MKL மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் 077 438 1167 என்ற இலக்கத்திற்கு அல்லது Kapalikhan என்ற முகநூல் தளத்திற்குச் சென்று விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# துப்பாக்கி சுடும் பயிற்சி பெறுகிறேன் எனது முதல் இலக்கு பாண்டியாவே
## சஹால் தெரிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹர்த்திக் பாண்டியாவை சுடுவதற்காக துப்பாக்கி பயிற்சி எடுத்து வருவதாக இந்திய சுழற்பந்து வீச்சாளர் சஹால் தெரிவித்துள் ளார்.

சுழற்பந்து வீச்சாளர் சஹால், தான் துப்பாக்கி பயிற்சி பெறும் வீடியோவை தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

மேலும், அவர் பாண்டியா குறித்து கூறுகையில், ஐ.பி.எல். போட்டிக்கு முன்பாக குறி வைப்பது குறித்து சில பயிற்சிகளை செய்து கொண்டு இருக்கிறேன்.

நான் துப்பாக்கியில் குறி வைக்கும் முதல் நபர் ஹர்த்திக் பாண்டியா மட்டுமே என தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சஹாலின் உடல் வாகுவை கிண்டல் செய்யும் விதமாக, ஹர்த்திக் பாண்டியா அவரை ஜிம்முக்கு செல்லுமாறு கூறி இருந்தார்.

அதற்காகவே சஹால் இவ்வாறு டுவிட் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. மேலும், ரசிகர்கள் சிலரும் டுவிட்டரில் சஹாலை கிண்டல் செய்து வருகின்றனர். (க)

# மியாமி ஓபன் டென்னிஸ் சம்பியன் வென்ற யோன் இஸ்னெர்



மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. அதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டிக்கு ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், அமெரிக்க வீரர் ஜான் இஸ்னெர் ஆகியோர் முன்னேறினர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சொந்த மண்ணில் விளையாடிய ஜான் இஸ்னெர் சம்பியன் பட்டத்தை கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்புடன் விளையாடினார். முதல் செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளிகள் எடுத்தனர். இறுதியில், ஸ்வெரேவ் முதல் செட்டை 7-6 (7-4) என கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில் அதிரடியாக விளையாடிய ஜான் இஸ்னெர் இரண்டாவது செட்டை 6-4 என கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது செட்டில் சிறப்பாக விளையாடிய இஸ்னெர் அந்த செட்டையும் 6-4 என கைப்பற்றினார். இதன்மூலம் இஸ்னெர் சம்பியன்பட்டத்தை கைப்பற்றினார். (க)

## மகள் சடலமாக மீட்பு...

பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் காட்டுப்புறமாக இருக்கும் அவ் வீட்டில் நல்லதம்பி இராசம்மா (வயது 76) மற்றும் அவரது மகளான நல்லதம்பி ரேவதி (வயது 58) ஆகிய இருவரும் தனிமையில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் அவரின் உறவினர் ஒருவர் அங்கு சென்றபோது படுக்கையில் மகள் சடலமாகவும் தாயார் குற்றுயிராகவும் இருந்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் படுகாயமடைந்த தாயார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

வீட்டின் விறாந்தையில் இரண்டு பாய்கள் விரிக்கப்பட்டு நுளம்பு வலையும் கட்டப்பட்டு காணப்படுகிறது. மகளின் சடலம் பாயிலே காணப்பட்டது.

இரவு வேளை வீட்டில் நுழைந்தவர்களினாலே இவர்கள் படுக்கையில் வைத்து வெட்டி காயப்படுத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

எது எவ்வாறாயினும் அவர்களுக்கு விரோதிகள் இல்லை எனவும் கொள்ளையர்கள் வருவதற்கு கூட அவர்கள் வசதியானவர்கள் இல்லை எனவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். மரணமடைந்தவரின் உடலில் வெளிக்காயங்கள் இல்லை எனப் பொலிஸார் கூறினர்.

ஆனாலும் கொலை செய்யப்பட்டமையின மர்மம் துலங்காத நிலையில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் ஜெயலத் தலைமையிலான குற்றத்தடுப்புப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

## வலி.வடக்கு பிரதேச...

ஆட்சியமைத்து வருகின்ற நிலையில் அதன் தொடர்ச்சியாக வலி.வடக்கு பிரதேச சபையையும் தன்வசப்படுத்தியது. சபையின் முதல் அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் சோ. சுகிர்தனும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் தாயுமானவன் நிகேதனும் பிரேரிக்கப்பட்டனர். தொடர்ந்து சபையில் தவிசாளர் தெரிவிற்கான பகிரங்க வாக்கெடுப்பிற்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப்பெற்றதையடுத்து பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் கூட்டமைப்பின் சோ.சுகிர்தன் ஈ.பி.டி.பி மற்றும் ஐ.தே.க கட்சிகளின் வாக்குகள் உள்ளடங்கலாக 30 வாக்குகளை பெற்ற நிலையில் தா.நிகேதன் 6 வாக்குகளை பெற்றார். வாக்கெடுப்பு நடைபெற்ற போது ஈ.பி.டி.பி கட்சி உறுப்பினர் ஒருவர் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை, தமிழர் விடுதலைக் கூட்டணி வாக்கெடுப்பில் பங்கேற்காது நடுநிலை வகித்திருந்தது.

குறித்த சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 17 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 8 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 2 ஆசனங்களையும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி 2 ஆசனங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## போராட்டம் நடத்திய...

லண்டனில் இலங்கை தேசியக் கொடிக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்திய முள்ளியவளை மாமூலையினை சேர்ந்த ஜெ.இளவரசன் என்பவரின் குடும்பத்தினர் மீது மர்ம நபர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக வவுனியாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், லண்டனில் இலங்கை சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் முன்னிலையில் நின்று செயற்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் முள்ளியவளை மாமூலையில் உள்ள ஜெ.இளவரன் என்பவரின் வீட்டிற்கு கடந்த 18.03.2018 அன்று இரவு வேளை குறித்த நபரின் வீட்டிற்கு சென்ற சில நபர்கள் அவரது தாயாரை அச்சுறுத்தியுள்ளார்கள்.

இது தொடர்பில் அவரது உறவினர்கள் முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறையிட்டபோதும் அவர்களின் முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் இது தொடர்பில் முல்லைத்தீவு பகுதியில் உள்ள மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவர் ஊடாக வவுனியாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவிடம் 02.04.2018 அன்று முறையிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம-281)

## பேரவையின் அலுவலகம்...

நேற்று மாலை ஒரு வாகனத்தில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த அலுவலகத்தினுள் புகுந்து அலுவலகத்தை அடித்து நொருக்கியதுடன். பெயர் பலகைகளை தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

பின்னர் அங்கிருந்த 15 ஆயிரம் பணத்தை யும் கட்டில், காஸ் அடுப்பு என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர். இது குறித்த அலுவலகத்தில் இருந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழுங்கியதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இது தனிப்பட்ட பகையால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்றும், பாதிக்கப்பட்டவர்கள் வழுங்கிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் உள்ள வீட்டில் தளபாடங்கள் இருப்பதாக பொலிஸாருக்கு தெரிவித்ததை அடுத்து அங்கு சென்று சோதனை செய்தபோது குறித்த தளபாடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் தாக்குதல் மேற்கொண்டவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

## ரயில் விபத்து...

யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தின் போது 55 வயதுடைய தயா என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் பாவனை இல்லாத வீதியில் சென்ற அவர், ரயில் கடவையை கடக்க முற்பட்ட போதே உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## 120 குளங்களை...

விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இரண்டு ஆண்டுகளாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் நல்லிணக்க செயலணியால் 500 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வீதிகள், பாலங்கள், பாடசாலைகள், சுகாதார வசதிகள் போன்ற வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது நீர் தேவை என்று தான் நான் கருதுகின்றேன். யாழ்ப்பாணப் பிரதேசம் மிகவும் வரண்ட பிரதேசமாக உள்ளது. இலங்கையிலேயே மிகவும் வரண்ட பிரதேசம் யாழ்ப்பாணம் என்று நான் எண்ணுகிறேன். நீர் வசதி குறைந்த பிரதேசமாகவும் இது உள்ளது. இந்தப் பிரதேச மக்களில் பெருமளவானவர்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட விவசாயிகள். விவசாய தேவைகளுக்காக மட்டுமல்லாது குடிநீருக்கான தட்டுப்பாடும் ஏற்படுகின்றது.

ஆகையால், இந்த மக்களின் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்த போது கடந்த காலத்தில் அழிந்துபோன குளங்கள் இந்தப் பிரதேசங்களில் உள்ளன என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். இங்கிருந்த குளங்களில் பெருமளவான குளங்கள் தற்போது அழிந்து போயுள்ளன. சில குளங்கள் இருந்த பகுதிகள் தற்போது மூடப்பட்டு வீடுகள், கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் தற்போது இருநூறு குளங்கள் அபிவிருத்தி செய்யப்படக்கூடிய நிலையில் காணப்படுகின்றன.

அவற்றில் இருந்து 120 குளங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நல்லிணக்க செயலணியும் மாகாண சபைகளும் நீரியல்வளத் திணைக்களமும் இணைந்து முன்னெடுக்க தீர்மானித்திருக்கின்றோம். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அழிவடைந்த நிலையில் காணப்படும் 120 குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக நல்லிணக்க செயலணியால் 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-4,60)

## பணிப்புறக்கணிப்பு...

க்களில் வழங்கப்பட்ட உறுதிமொழியையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட தாக அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் 24 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்து குழு தெரிவித்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணி புரியும் தற்காலிக மற்றும் சமயாசமய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் நாடுமுழுவதும் பெப்ரவரி 28ஆம் திகதி முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கூட்டமைப்புடன்...

தேசிய முன்னணி அமைச்சர்களுக்கும் இடையே நேற்றிரவு நடந்த பேச்சுக்கள் சமரசம் எட்டப்படாத நிலையில் முடிவடைந்தன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடிக்க ஜனாதிபதி விரும்பவில்லை. அது சிங்கள மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுடனும் இன்று காலை 9 மணிக்கு மீளவும் பேச்சு நடத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர் மனோ கணேசன் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான முக்கிய சந்திப்பு ஒன்று ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்றிரவு இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிரணி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளை நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நேற்று மாலை 6.30 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில் பிரதமருடன் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்களும் பங்கேற்றனர்.

நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர நம்பிக்கை வெளியிட்டார்.

மங்களவின் கருத்தைக் கேட்டதும் பொங்கி எழுந்த ஜனாதிபதி,

கூட்டு அரசின் பெயரைக் கெடுக்கக் கூடாது. தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நம்பிக்கையில்லா பிரேரணையைத் தோற்கடித்தால், அதனை சிங்கள மக்கள் தவறாகப் புரிந்துகொள்வர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளியிடவில்லை. கட்சியிலுள்ள மிதவாதப் போக்குடைய சிலர், நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக பேசுகின்றனர். எனவே கட்சியுடன் பேசி இறுதி முடிவை எடுப்போம் என்றார். (ம)

## பிரேரணை நாளைய...

னைத் தெரிவித்தார்.

கட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் வகையில், பாரிய மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், இளைஞர் தலைமைத்துவத்திடம் கட்சி ஒப்படைக்கப்படுமென மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு மத்தியில் அகிலவிராஜ் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## தமிழ் அரசியல் கைதி...

மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசினார்கள்.

இந்த சந்திப்பு சுமார் அரைமணிநேரம் நடைபெற்றது. இச்சந்திப்பில் சில முக்கிய விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இதன்போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்ததாவது,

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகப் பேசியபோது அவர்களின் விடுதலை தொடர்பில் ஏற்கனவே சிறைச்சாலைகள் அமைச்சரினால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அது உடனடியாக பிரதமரிடம் கையளிக்கப்படும் என்றும் அதன் பிரகாரம் தற்பொழுது சிறையில் உள்ள பலருக்கு விடுதலை வழங்கப்படும் என்றும் ஏனையோர் ஒருகுறுகிய புனர்வாழ்விற்குப் பின்னர் விடுவிக்கப்படுவர் என்றும் எமக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

403 நாட்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சாலைகளில் போராட்டங்களை நடத்தி வருவதையும் இவற்றை அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருப்பது மனவருத்தத்தைத் தரக்கூடிய செயல் என்பதுடன், இதுவொரு அரசாங்கத்தின் பொறுப்பின்மையை வெளிப்படுத்துகின்றது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம். இவற்றிற்கு இனிமேலும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு வருடம் ஆகியும் அதற்கான உத்தியோகத்தர்களை நியமித்து ஒருமாதம் ஆகியும் பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன் மக்கள் அந்த அலுவலகத்தின்மீது நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள். எனவே இந்த விடயம் தொடர்பாக திட்டவட்டமான துரித நடவடிக்கை தேவை என்பதை குறிப்பிட்டிருக்கின்றோம்.

இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படும்வரை காணி சுவீகரிப்பு போன்ற சகல நடவடிக்கைகளும் மாகாண சபையின் ஒப்புதலுடன் நடைபெற வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளோம்.

அது தொடர்பான ஒரு அமைச்சரவை பத்திரத்தைத் தாக்கல் செய்யும்படி புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் பணிக்கப்பட்டிருக்கின்றார்.

இவை தவிர, பட்டதாரிகளின். வேலை வாய்ப்புக்கள் தொடர்பாகவும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களுக்கு சிற்றூழியர்களாக சிங்களவர்களை நியமிப்பது நிறுத்தப்பட வேண்டுமென்றும் ஏற்கனவே அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு அந்த இடங்களுக்கு தமிழ் இளைஞர் யுவதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளோம்.

அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட விடயங்கள் தொடர்பாகவும் வடக்கு அபிவிருத்தி தொடர்பாகவும் தொடர்ந்து பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ம)

## யாழ். பல்கலையில்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று கொடும்பாவி எரித்து இறுதிக் கிரியை செய்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் உட்பட நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழக ஊழியர்கள் பல்வேறு வடிவங்களில் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவினர் உள்ளிட்ட சிலர் தமது போராட்டத்துக்கு குழப்பம் விளைவிப்பதாகத் தெரிவித்து அதனைக் கண்டிக்கும் முகமாக பல்கலைக்கழக வளாகத்துள் கொடும்பாவி கட்டி இழுக்கப்பட்டு ஒப்பாரி வைத்து யாழ். பல்கலைக்கழக வாசலில் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த வாரம் பல்கலைக்கழக வாயிலை மூடியும் பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## நாவற்குழியில் இரா...

பின்னர் அவர்களில் 22 பேர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் சட்டத்தரணிகள் கு.குருபரன் மற்றும் எஸ்.சுபாசினி ஆகியோர் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த நவம்பர் 9 ஆம் திகதி 12 பேர் சார்பில் தனித்தனியே ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுக்களில் முதலாம் எதிர்மனுதாரராக துமிந்த கெப்பிட்டிவெலான 2 ஆம் எதிர்மனுதாரராக இலங்கை இராணுவ தளபதி மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரராக சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த 12 மனுக்களில் 3 மனுக்கள் மட்டும் மேல் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய 9 பேரின் மனுக்கள் 2002 ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. அந்த மனுக்கள் யாழ்ப்பாணத்தில் நடத்தக் கூடாது என அப்போதைய யாழ்.மாவட்ட இராணுவ தளபதி கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் 2003ஆம் ஆண்டு தாக்கல் செய்த மனுவை அடுத்து, இந்த வழக்குகள் அக்கால பகுதியில் அனுராதபுர மேல் நீதிமன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டது.

வேறொரு மேல் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் வழக்கொன்றை இன்னொரு மேல் நீதிமன்றில் மீள திறக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், 9 பேரின் ஆட்கொணர்வு மனுக்களைத் தள்ளுபடி செய்திருந்தார்.

குறித்த வழக்கில் இராணுவத்தின் சார்பில் சட்டமா அதிபர் ஆஜராவதற்கு கடந்த தவணை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் மன்றில் விண்ணப்பம் செய்த போது மனுதாரர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து விண்ணப்பம் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போதே மேற்குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது எதிர்மனுதாரர்களான இராணுவ அதிகாரிகள் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் இருந்து பிரதி மன்றாதிபதி ஜே.ரி.குணசேகர முன்னிலையாகியிருந்தார். அவர்களுடன் அரச சட்டவாதிகள் நாகரட்ணம் நிஷாந்த், கே.பிரிந்தா ஆகியோரும் முன்னிலையாகினர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், எஸ்.சுபாசினி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இராணுவத்தினர் சார்பில் முன்னிலையாகியிருந்த பிரதிமன்றாதிபதி தனது கருத்தை மன்றில் முன்வைக்கையில் குறித்த வழக்கு 20 ஆண்டுகளுக்கு பின்னர் மிகவும் தாமதமாகி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்கல் செய்ய முடியாது எனவும், குறித்த வழக்கில் மூல ஆவணங்கள் இல்லை எனவும் தனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தார். மேலும் வழக்கில் 1ஆம் 2ஆம், 3ஆம் எதிர்மனுதாரர்கள் சார்பில் தான் ஆஜராவதாகவும் விசாரணைகள் வாதங்களை தான் முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

இவற்றை கருத்தில் கொண்ட நீதிபதி தனது கட்டளையில் தெரிவிக்கையில்,

முதலாவது இரண்டாவது எதிர்மனுதாரர்கள் அரச உத்தியோகத்தர்கள் ஆவர். அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக வரும் வழக்கு ஒன்றில் முன்னிலையாக வேண்டிய கடப்பாடு சட்ட மா அதிபருக்கு உண்டு. விரும்பினால் மட்டுமே அவர் விலகிக்கொள்ள முடியும். இந்த மன்றில் தற்போது அரசியலமைப்புக்கு உட்பட்டு ஆட்கொணர்வு மனுக்களே முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது உரிமை மீறப்பட்டுள்ளதா? என்பதனை ஆராய்வதற்காகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உரிமை மீறப்பட்டுள்ளதாக இந்த மன்று கட்டளையிடும் பட்சத்திலேயே இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது பிரதிவாதி மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிவெலானவுக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

அந்த வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வரும் போது, அதனைக் கொண்டு நடத்தவேண்டிய பொறுப்பு சட்ட மா அதிபருக்கு உண்டு. எனவே ஆட்கொணர்வு மனுக்கள் மீதான கட்டளையை மேல் நீதிமன்று வழங்கும் வரை எதிர்மனுதாரர்களான இராணுவ அதிகாரிகள் சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாவதற்கு கோரப்பட்ட விண்ணப்பம் இந்த நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அத்துடன், இதற்கு ஆட்சேபனை தெரிவித்து மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கட்டளை வழங்கினார்.

முதலாவது பிரதிவாதி சார்பில் சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக மனுக்கள் மீதான விசாரணை வரும் மே மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-9)


வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் தெரிவு பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள்
05, 06ஆம் திகதிகளில்
வியாழன், வெள்ளி 3 - 5pm
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 843 5224
(3496)

பிரத்தியேக வகுப்பு
தரம் 6,7 மாணவர்களுக்கான கணிதமும், 10,11 மாணவர்களுக்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0776452622
(C-2025)

A/L வரலாறு 2020
M.பத்மன்
M.A (History)
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்
கற்பிக்கும் இடங்கள்
DMI ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
உயர்கலைக் கல்லூரி, குளப்பிட்டி.

தவறிவிட்டது
வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கும் குடத்தனை சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் என்னுடைய கைப்பை (பேஸ்) தவறிவிட்டது. மகேந்திரன் ஜெகன் NIC No: 913554868V மற்றும் வேறு ஆவணங்களும் அடங்கியுள்ளது. அதனை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (C-2089)
தொடர்பு: 0779391819

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
T.P. 077 662 9137
அன்றும் இன்றும் என்றுமே O/L Day Class தனித்துவம் வாய்ந்தது
O/L Day Class
8 மணி To 2 மணி ஆரம்பம் 04.04.2018 கா.மு. 8 மணி
☛ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
☛ யாழ். நகரில் Day Class இங்கு மட்டுமே
☛ பிரிவு I 60 மாணவர்களுக்கு மட்டும்
☛ 40 வருட தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
☛ 03.04.2018 முன் அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்
☛ பிரிவு II மிக விரைவில்
☛ பாடசாலை மாணவர்களுக்கு சனி, ஞாயிறு
ஆண்டு 06 தொடக்கம் O/L வரை 8.00 மணி தொடக்கம் 2 மணி. அனுமதிகள் வழங்கப்படுகிறது.
(C-2043)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1982)

A/L 2K20
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம்: 07.04.2018
காலை - 8.00 மணி
DMI
JAFFNA
(C-2026)

30 வருட கல்விச் சேவையில்...
யாழ் நகரின் No1 கல்வி நிறுவனம்
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்
O/L DAY CLASS
(பகல் நேர வகுப்பு)
பிரிவு I - ஆரம்பம்: 04.04.2018
புதன்கிழமை காலை 8.00 மணி
★ கடந்த (2017) O/L பெறுபேறுகளில் 95% சதவீத மாணவர்கள் சித்தி.
★ புதிய அனுமதிகள் இன்று முதல்.
T.P: 077 459 8440

பிரத்தியேக/குழு வகுப்புக்கள்
கணக்கீடு A/L2019, A/L2020
வணிகக்கல்வியும் கணக்கீடும் O/L2018,10
Mr.Balakajen
சுந்தர்மடம் | கொழும்புத்துறை
(3489) T.P: 076 565 5956

A/L - 2020
புவியியல்:
N.BABU
★ DMI ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
★ C.C.A சுன்னாகம்.
ஆரம்பம்: 07.04.2018 சனி 8am
தொடர்பு: 0779365087

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புக்கள்
இன்று செவ்வாய் (3/4) தொடக்கம்
முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
பி.ப 1.30-5.00 வரை
திட்டமிடல் சேவை
பி.ப 5.00-7.00 வரை
முகாமைத்துவ உதவியாளர்
செவ், வியாழன் 3.30 - 6.00 வரை
0766883394
D.M.I
(வெலிங்டன் சந்தி)
(SDB வங்கி எதிரில் டானியல் கட்டட 3-ம் மாடி)

உடனடி வேலைவாய்ப்பு
இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்!
எமது தனியார் நிறுவனத்தில் O/L, A/L தகைமையுடன் பணிபுரியலாம். உலகின் எப்பாகத்திலும் எமது திறமைகளை வெளிக்காட்டலாம்.
● முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியோருக்கு முன்னுரிமை.
● உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
● வயதெல்லை 18 - 30
● ஆரம்பம்- 17,500/=
தொடர்பு: 0766668385
(3495)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பத்திநாதர் அன்ரனிடயஸ் (செல்லக்குமார்)
(அவுட் மோட்டர் என்ஜின் மெக்கானிக்)
பிறப்பு: 10.04.1979 - இறப்பு: 03.04.2016
மீளாத் துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே! கலையாத நினைவுகளில் உதிரும் கண்ணீருடன் உம் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்
மாதகலை பிறப்பிடமாகவும் உடுத்துறை தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
நீ.பத்திநாதர் (மந்திரி), கனால் வீதி, மாதகல்.
077 642 5538
(3490)

PHYSICS
A/L 2020
பிரிவு-I
பொறியியல்-அலகு II
ஆரம்பம்:4.4.2018 புதன்-6.00 p.m
(திங், புத, வெள்--6.00 p.m)
பிரிவு-II
அளவீடுகள்-அலகு-I
ஆரம்பம்-4.4.2018 புதன்-3.00 p.m
(திங், புத, வெள்-3.00 p.m)
ஆசிரியர்-
திரு. ம.ஸ்பெல்மன் (Bsc, PGDE)
இடம்:10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில், கியூடெக்-கரித்தாஸ் அருகாமை)
■ Personal Class, Group Class ஆக கற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
T.P:NO:-0776116724
(3486)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.